# உரிமை

வாராந்த மின்னிதழ்

இதழ்: 294
திகதி: 08-06-2025
மின்னஞ்சல்
urimai2009@gmail.com



# சிங்கள இனவெறி அரசின்



## இரத்தக்கறை படிந்த கோரமான தமிழின அழிப்பின் சாட்சியமே மனிதப் புதைகுழிகள்

தமிழ்த் தேசிய அவதானிப்பு மையம் அறிக்கை

## ஈ.பி.டி.பியுடன் தமிழரசின் தலைமை தேன்நிலவு

### கிழக்கில் தமிழரசுக் கட்சியினர் கொந்தளிப்புடன்



(உரிமைக்கு சிறப்புப் பேட்டி)






## களங்கப்படுத்திக் கொண்ட தமிழரசு






# சிங்கள இனவெறி அரசின்

## இரத்தக்கறை படிந்த கோரமான தமிழின அழிப்பின் சாட்சியமே

# மனிதப் புதைகுழிகள்

## தமிழ்த் தேசிய அவதானிப்பு மையம் அறிக்கை

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்ட முக்கியமான மனிதப் புதைகுழிகள், நாட்டின் இரத்தக்கறை படிந்த வரலாற்றின் சாட்சியங்களாக இருப்பதாகவும் அதன் தொடர்ச்சியாக செம்மணி சித்துபாத்தி மயானத்தில் தற்போது கண்டுபிடிக்கப்பட்டு அகழப்பட்டுவரும் மனிதப் புதைகுழி தமிழின அழிப்பிற்கான இன்னொரு சாட்சியம் என்றும் சுட்டிக்காட்டியுள்ள தமிழ்த் தேசிய அவதானிப்பு மையம் 1999 – 2000 ஆண்டு காலப்பகுதியில் செம்மணியில் மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்ட போது தமிழீழ விடுதலைப் புலிகள் வலியுறுத்தியது போல சர்வதேச பொறிமுறை ஒன்றின் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளது.

வாரந்தோறும் தனது அவதானிப்பு அறிக்கையினை வெளியிட்டுவரும் தமிழ்த் தேசிய அவதானிப்பு மையம் இந்த வாரம் (08.06.2025) வெளியிட்டுள்ள வாராந்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறது. இது தொடர்பில் தமிழ்த் தேசிய அவதானிப்பு மையம் வெளியிட்டுள்ள இந்த வார அறிக்கை வருமாறு,

### தமிழின அழிப்பு

சிறீலங்கா அரசு நடத்திய, திட்டமிட்ட இனவெறி நடவடிக்கைகளின் ஒரு முக்கிய பகுதியே தமிழின அழிப்பு (Genocide of Tamils) ஆகும். 1983 முதல் 2009 வரையிலான காலப்பகுதியில், தமிழ் மக்கள் சிறீலங்கா அரசின் இராணுவ மற்றும் பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கைகளின் கீழ் இலட்சக்கணக்கான பேர் கொல்லப்பட்டனர், காணாமல் ஆக்கப்பட்டனர், நிரந்தர இடப்பெயர்ச்சிக்கு உள்ளாக்கப்பட்டனர். ஆயுதம் ஏந்தாத பொதுமக்கள், குழந்தைகள், பெண்கள் என யாரும் விலக்கப்படவில்லை. 2009–இல் முடிவுற்ற யுத்தத்தில் மட்டும் 70,000 – க்கும் மேற்பட்ட தமிழ் பொதுமக்கள் கொல்லப்பட்டதாக ஐ.நா. சுட்டிக்காட்டுகிறது. ஆனால் இந்தத் தொகை குறித்து ஐயப்பாடுகள் காணப்படுவதோடு சுமார் இரண்டு இலட்சம் மக்கள் படுகொலை செய்யப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் செம்மணி சித்துபாத்தி மயானத்தில் கண்டுபிடிக்கப்பட்டு அகழ்வுப் பணிகள் நடைபெற்றுவரும் மனிதப் புதைகுழி

2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம், செம்மணி பகுதியில் உள்ள அரியாலை சித்துபத்தி இந்து மயானத்தில், ஒரு தகனம் மையம் கட்டும் பணியின் போது, மனித எலும்புக்கூறுகள் மீண்டும் கண்டெடுக்கப்பட்டன. இது அந்தப் பகுதியில் மேலும் புதைகுழிகள் இருக்கலாம் என்ற அச்சத்தை ஏற்படுத்தியது. நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில், 19க்கும் மேற்பட்ட எலும்புக்கூறுகள் கண்டெடுக்கப்பட்டதாகவும், அதில் ஒன்றின் முக அமைப்பின் அடிப்படையில் ஒரு வயதிற்கும் குறைவான குழந்தையின் உடலாக இருக்கக்கூடும் என நிபுணர்கள் உறுதி செய்துள்ளனர். உடலுடன் ஆடைகள் அல்லது தனிப்பட்ட பொருட்கள் ஏதும் காணப்படாததால் மரணத்தின் சூழ்நிலை குறித்து மேலும் கேள்விகள் எழுப்பியுள்ளதோடு தடையங்களை விட்டுவிடக்கூடாது என்பதற்காக ஆடைகள் கழற்றப்பட்டு நான்கைந்து உடலங்களை ஒன்றாக சேர்த்து நிர்வாணமாக புதைக்கப்பட்டமை தமிழ் மக்கள் மத்தியில் மீண்டும் ஒருவித அச்ச உணர்வைத் தோற்றுவித்திருக்கிறது. இவை தமிழர்களின் மீது மேற்கொள்ளப்பட்ட கூட்டு படுகொலைகளும், அதனை மறைத்த புதைகுழிகளும் மீண்டும் வெளிச்சத்திற்கு வரச் செய்துள்ளது.

### கிருஷாந்தி மற்றும் அவரது குடும்பத்தினரின் படுகொலை

1996 ஆம் ஆண்டு, யாழ்ப்பாணத்தில்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

உரிமை
மின்னிதழ்

# நிறைவேற்ற வேண்டிய வாக்குறுதி

செம்மணி சித்துப்பாத்தி மயானத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியில் இருந்து முதற்கட்டமாக, 19 எலும்புக்கூட்டு தொகுதிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மயானத்தில் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்வதற்காக குழிகள் தோண்டப்பட்டபோது தற்செயலாக இந்த புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டது. ஆனாலும் உரிய தரப்பினர் உடனடியாக தலையிட்டு புதைகுழி தொடர்பாக விசாரணைகளை முன்னெடுக்க முன்வரவில்லை. தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்கள் சார்பில் முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட பின்னரே, நீதிமன்றம் தலையீடு செய்து அகழ்வு பணிக்கு உத்தரவிட்டது. முதற்கட்ட அகழ்வு பணியில் மீட்கப்பட்டிருக்கின்ற 19 மனித எலும்புக்கூட்டு தொகுதிகளில் குழந்தைகளின் எலும்புக்கூடுகளும் அடங்கியிருக்கின்றன.

மயானத்தில் புதைகுழி இருக்கும் தானே என்று யாரும் கருதக் கூடாது, இந்து மாயானம் என்பதால், அங்கு எரிக்கும் வழக்கமே உள்ளது. புதைக்கப்படுவது அரிது. இந்தப் புதைக்குழி வழக்கமான புதைக்குழி போல ஒழுங்கானதாக இருக்கவில்லை. சடலங்கள் குறிப்பிட்ட இடைவெளி விட்டு, ஒழுங்கு முறைப்படி புதைக்கப்பட்டதற்கான அடையாளங்கள் இல்லை. அவை அவசரமாக– பதட்டமான சூழலில் புதைக்கப்பட்டிருக்கின்றன என்று அகழ்வாய்வில் ஈடுபட்ட நிபுணர்கள் கூறியிருக்கிறார்கள். அதைவிட, வழக்கமாக சடலங்கள் புதைக்கப்படுகின்ற ஆழத்தில் இல்லாமல் குறைந்த ஆழத்திலேயே அவை புதைக்கப்பட்டிருக்கின்றன. சடலங்கள் ஒன்றின் மேல் ஒன்றாக போடப்பட்டு புதைக்கப்பட்டதற்கான தடயங்களும் தென்படுகின்றன. எல்லாவற்றிற்கும் அப்பால் எந்த தடயங்களும், எந்த காலத்திலும் சிக்கி விடக்கூடாது என்பதற்காக, இந்தப் புதைகுழியில் சடலங்கள் கவனமாக புதைக்கப்பட்டிருக்கின்றன. அதனால், எந்த உடைகளோ அணிகலன்களோ வேறு எந்த தடயப் பொருட்களோ அதில் இருக்கவில்லை.

கிட்டத்தட்ட 30 ஆண்டுகளுக்கு முந்தியது என நம்பப்படும் கொக்குத்தொடுவாய் புதைகுழி தோண்டப்பட்ட போது ஏராளமான தடயப்பொருட்கள் கிடைத்தன. உடைகள் மற்றும் இலக்கத் தகடுகள் போன்றவையும் கிடைத்திருந்தன. உடைகளை வைத்து ஆண் –பெண் என அடையாளம் காணக்கூடிய சூழலும் இருந்தது. ஆனால், செம்மணிப் புதைகுழிகளில் கண்டெடுக்கப்பட்ட எலும்புக்கூட்டு எச்சங்களில், எந்தவொரு உடைகளும் கூட கிடைக்கவில்லை. இது புதைக்கப்பட்டவர்கள் யார் என எந்தக் காலத்திலும் அடையாளம் காண முடியாத வகையில்– திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள ஒரு நடவடிக்கை என்பது தெளிவாக தெரிகிறது.

1996ஆம் ஆண்டு யாழ்ப்பாண குடாநாடு கைப்பற்றப்பட்ட பின்னர், சுமார் 600 இளைஞர்கள், கைது செய்யப்பட்டு முகாம்களுக்கு கொண்டு செல்லப்பட்ட பின்னர் காணாமல் ஆக்கப்பட்டார்கள். அவர்களுக்கு என்ன நடந்தது என்று யாருக்கும் தெரியாது. அவர்களைத் தேடித் திரிந்த பெரும்பாலான தாய் தந்தையர் மரணமடைந்து விட்டார்கள். இதுபோல பல்வேறு காலகட்டங்களில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் கைது செய்யப்பட்டவர்கள், கடத்தப்பட்டவர்கள் நூற்றுக்கணக்கில் காணாமல் ஆக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களின் நிலையை அறிய முடியாத நிலை இன்று வரை நீடிக்கின்றது.

இந்தக் கைதுகள், கடத்தல்களுக்கு சிறீலங்கா படைகளும், அதனுடன் சேர்ந்தியங்கிய– இப்போது தமிழரசுக் கட்சியுடன் கூட்டு சேர்ந்துள்ள ஒட்டுக் குழுவான ஈ.பி.டி.பி.யும் பொறுப்புக்கூற வேண்டியவர்கள்.

இத்தகைய நிலையில் செம்மணியில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்ற பாரிய மனிதப் புதைகுழி தமிழர்கள் ஈவிரக்கம் இன்றிப் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதற்கு மற்றொரு உதாரணம். இதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழிகள் எதற்கும் சரியான தீர்வு வழங்கப்படவில்லை. நியாயமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை.

இவ்வாறான நிலையில் செம்மணிப் புதைகுழிக்கு நீதி கிடைக்கும் என்று நம்புவது கடினம்.ஜனாதிபதித் தேர்தலின் போதும், பொதுத் தேர்தலின் போதும் அனுர குமார திசாநாயக்க யாழ்ப்பாணக் குடாநாட்டில் பிரச்சாரம் செய்தபோது, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக விசாரணைகள் நடத்துவதாக உறுதியளித்திருந்தார். அவர் அந்த வாக்குறுதியை மறந்து போனாலும், இப்பொழுது செம்மணியில் கண்டறியப்பட்டிருக்கின்ற பாரிய மனிதப் புதைகுழி, அந்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டியதன் அவசியத்தை வெளிப்படுத்தியிருக்கிறது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உண்மையும் நீதியும் முக்கியம். அந்தப் பொறுப்பை, என்.பி.பி அரசாங்கம் நிறைவேற்றியே ஆக வேண்டும்.

ஆசிரியர்

# செம்மணியில் 19 எலும்புக்கூடுகள் மீட்பு!

## அதிர்ச்சியில் தமிழர்கள்





யாழ்.அரியாலை, சித்துப்பாத்தி இந்து மயானத்தில் காணப்பட்ட மனிதப் புதைகுழி ஆரம்பகட்ட பரீட்சார்த்த அகழ்விலிருந்து நேற்றுவரை 19 மனித எலும்புக்கூடுகள் புதைகுழியில் இருந்து வெளியே எடுக்கப்பட்டுள்ளன. மீட்கப்பட்டுள்ள 19 எலும்புக்கூடுகளும் சட்டவைத்திய அதிகாரி செல்லையா பிரணவனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் சட்டத்தரணி ரணித்தா ஞானராஜா தெரிவித்தார்.

யாழ்.அரியாலை, சித்துப்பாத்தி இந்து மயானத்தில் காணப்பட்ட மனிதப் புதைகுழி ஆரம்பகட்ட பரீட்சார்த்த அகழ்விலிருந்து நேற்றுவரை 19 மனித எலும்புக்கூடுகள் புதைகுழியில் இருந்து வெளியே எடுக்கப்பட்டுள்ளன. மீட்கப்பட்டுள்ள 19 எலும்புக்கூடுகளும் சட்டவைத்திய அதிகாரி செல்லையா பிரணவனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் சட்டத்தரணி ரணித்தா ஞானராஜா தெரிவித்தார்.

யாழ்- அரியாலை, சித்துப்பாத்தி இந்துமயானத்தில் காணப்பட்ட மனிதப்புதைகுழி பரீட்சாத்த அகழ்வு யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்ற நீதிபதி ஆ.ஆனந்தராஜாவின் மேற்பார்வையில் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த பரீட்சாத்த அகழ்வுப் பணியானது நேற்றுடன்

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

# இலங்கை வருகிறார் மனித உரிமைகள் ஆணையாளர்



இதேவேளை, யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு ஆகிய பகுதிகளுக்கு சென்று நேரடியாக நிலைமைகளை ஆராய உள்ளதுடன், உள்நாட்டு போரின் போது வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களை சந்தித்திக்கவும், விஜயத்தின் இறுதியில் கொழும்பில் ஊடகவியலாளர்களை சந்திக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் இடம்பெறவுள்ள ஜெனிவா மனித உரிமைகள் மீளாய்வு கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் முன்வைக்கப்பட உள்ள நிலையில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டேர்க் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்கின்றமை குறித்து அரசாங்கம் கூடுதல் அவதானம் செலுத்தியுள்ளது.

குறிப்பாக இறுதிக்கட்ட போரில் இடம்பெற்றதாக கூறப்படுகின்ற

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

# சிங்கள மக்களை கொண்டுவந்து தமிழ் மக்களின் போராட்டத்தை குழப்பத் திட்டம்

## நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் சாடல்



தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட திஸ்ஸ விகாரைக் காணிகள் மக்களுக்கு கிடைக்கப் பெறுவதை தடுப்பதற்காகவே தெற்கிலிருந்து பெரும்பான்மை இனத்தவர்களை அழைத்து போராட்டம் செய்ய ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதாக அகில இலங்கை தமிழ் காங்கிரசின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார். அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் மக்களுடைய காணிகளை அடாத்தாக பிடித்து யாருக்கும் தெரியாமல் கட்டப்பட்ட விகாரைக் காணிகளை அந்த மக்களுக்கு வழங்க வேண்டும் என்பதற்காக மக்களின் ஆதரவோடு இரண்டு வருடங்களுக்கு மேலாக போராடி வருகிறோம்.

அபிவிருத்தி குழு கூட்டங்களில் குறித்த விகாரை தொடர்பாக பலமுறை பேசியுள்ள நிலையில் அந்த விகாரை அமைக்கப்பட்டது சட்ட விரோதம் எனப் பலரும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இவ்வாறான ஒரு நிலையில் எதிர்வரும் பத்தாம் திகதி போயா தினத்திலும் திஸ்ஸ விகாரை அமைந்துள்ள தனியார் காணிகளை மக்களிடமே வழங்குமாறு கோரி போராட்டம் இடம்பெற உள்ள நிலையில் அதனை குழப்புவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதாவது சட்டரீதியாக குறித்த காணிகள் அந்த மக்களுக்கு



கிடைக்கப் பெறுவதை தடுப்பதற்கு தெற்கில் இயங்கும் சில சக்திகளின் ஏற்பாட்டில் எமக்கு எதிராகவும் விகாரைக்கு ஆதரவாகவும் போராட்டம் இடம்பெற உள்ளதாக அறிகிறோம்.

ஆகவே எதிர்வரும் பத்தாம் திகதி இடம்பெறவுள்ள தையிட்டி விகாரைக்கு எதிரான போராட்டத்தை திசை திருப்பும் போராட்டத்தை முறியடிக்க கட்சி பேதங்களைக் மறந்து அனைவரும் ஒன்று திரண்டு வருமாறு அவர் மேலும் தெரிவித்தார்.

# ட்ரம்ப் நகர்வால் இலங்கைக்கு காத்திருக்கும் ஆபத்து



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விதித்த பரஸ்பர வரிகளுக்கு எதிராக, அமெரிக்க சர்வதேச வர்த்தக நீதிமன்றத்தால் தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில், அதனை மீண்டும் நடைமுறைப்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அமெரிக்க சர்வதேச வர்த்தக நீதிமன்றத்தால் அமெரிக்க ஜனாதிபதிக்கு மீண்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வெள்ளை மாளிகை தாக்கல் செய்த மேல்முறையீட்டை பரிசீலித்த அமெரிக்க மேல்முறையீட்டு நீதிமன்றம், அதற்கான அனுமதியை வழங்கியுள்ளது.

வரி முறை

எனினும், 12 மாநில அரசாங்கங்களும், நிவ்யோர்க் சட்ட உயர் அதிகாரிகள் உட்பட பல பலம் வாய்ந்த நபர்களும் ஜனாதிபதியின் வரி முறையை அங்கீகரிக்கவில்லை.

3 மாதங்களாக தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பரஸ்பர வரி முறை மீண்டும் செயல்படுத்தப்பட்டால், இலங்கை ஏற்றுமதிகளுக்கும் 54 சதவீத வரி விதிக்கப்படும்.

இது இலங்கை ஆடைத் தொழில் உட்பட பல வணிகங்களில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

3 ஆம் பக்கம் தொடர்ச்சி→

## செம்மணியில் 19 எலும்புக்கூடுகள்

தற்காலிகமாக நிறைவுறுத்தப்படுகிறது. இந்த மனிதப் புதைகுழி அகழ்வுப்பணியானது மேலும் 45 நாட்களுக்கு நீடித்து நீதவான் ஆ.ஆனந்தராஜா நேற்றுமுன்தினம் அனுமதி அளித்திருந்தார்.

45 நாட்களுக்கான அகழ்வுப்பணிக்கான பாதீடு சட்டவைத்திய அதிகாரி செல்லையா பிரணவன், யாழ் நீதவான் நீதிமன்ற நீதபதியிடம் ஒப்படைத்துள்ளார்.

இதற்கமைய அடுத்த மூன்றாம் கட்ட அகழ்வுப்பணிக்காக உத்தேச திகதியாக ஜூன் 26ம் திகதி நீதவான் அனுமதித்துள்ளார்.

குறித்த உத்தேச திகதிக்குள்ளாக சமர்பிக்கப்பட்ட பாதீட்டின் நிதி கிடைக்கப்பெற்றால் மூன்றாம் கட்ட அகழ்வுப்பணி உத்தேச திகதியில் இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

3 ஆம் பக்கம் தொடர்ச்சி→

## இலங்கை வருகிறார்

பாரதூரமான மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக் கூறும் வகையில் இலங்கைக்கு எதிராக வெளிக்கள சர்வதேச விசாரணை ஒன்றுக்கான தீர்மானமாக எதிர்வரும் செப்டெம்பர் மாதம் ஜெனிவா மீளாய்வு கூட்டத்தொடரில் முன்வைக்கப்பட உள்ளது. பிரித்தானியா தலைமையில் குறித்த தீர்மானம் கொண்டுவரப்பட உள்ளதாக ஏற்கனவே தகவல்கள் வெளியாகியுள்ளன. இதற்கு ஆதரவாக ஐக்கிய நாடுகள் சபையில் சிறப்பு அந்தஸ்து கொண்ட சர்வதேச அமைப்புகள் மற்றும் நாடுகள் ஆதரவளித்து வருகின்றன.

இதன் பிரகாரம் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் இலங்கை குறித்து வலுவானதொரு தீர்மானம் பிரித்தானியா தலைமையில் முன்வைக்கப்பட உள்ளது. இந்த நெருக்கடியை தவிர்க்கும் வகையில், நட்பு நாடுகள் பலவற்றுடன் அரசாங்கம் கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளது. இருப்பினும் பயங்கரவாத தடுப்பு சட்டத்தை இரத்து செய்தல், வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கான பொறுப்புக் கூறல், போர் குற்றச்சாட்டுக்களை விசாரித்து உண்மையை கண்டறிதல் மற்றும் மீள்நிகழாமையை உறுதி செய்தல் என்பன சர்வதேசத்தின் அழுத்தங்களாக உள்ளன.

இதனை பின்னணியாக கொண்டு தான் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் உள்ளக பொறிமுறை ஒன்றின் கீழ் இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் விசாரிக்கப்படும் என்று 58 ஆவது அமர்வில் கலந்துக் கொண்டு குறிப்பிட்டிருந்தார்.

எனவே அரசாங்கத்தினால் ஜெனிவாவில் வழங்கப்பட்ட உறுதிமொழிகளை ஆராயும் வகையிலேயே ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கைக்கு விஜயம் செய்கிறார். பொறுப்புக்கூறலில் இலங்கையின் முன்னேற்றங்கள் மற்றும் தாமதங்கள் குறித்து தீவிரமாக ஆராயப்பட்டு செப்டம்பரில் எழுத்து மூல அறிக்கை சமர்பிக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஈ.பி.டி.பியுடன் தமிழரசின்

# தலைமை தேன்நிலவு

## கிழக்கில் தமிழரசுக் கட்சியினர் கொந்தளிப்புடன்

(உரிமைக்கு சிறப்புப் பேட்டி)



### ஈபிடிபி தமிழ் மக்களுக்கு எதிராக செய்தவற்றை நாங்கள் மறக்கமாட்டோம்



**தவராஜா சர்ஜீன்**
களுதாவளை கிளைத் தலைவர்
இலங்கை தமிழரசுக் கட்சி
மட்டக்களப்பு மாவட்டம்.

இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் திரு. கே. சிவஞானம் ஐயா ஈபிடிபியின் செயலாளர் நாயகத்தை யாழ்ப்பாணத்திலுள்ள சிறீதர் தியேட்டருக்கு நேரடியாகச்

தொடர்ச்சி 6ஆம் பக்கம்

### தமிழரசுக் கட்சி தமிழ்த் தேசிய நீக்கம் செய்கிறது



**சீ.சிவயோகநாதன்**
சிவில் சமூக செயற்பாட்டாளர்
திருகோணமலை

அண்மைய செய்தியாக மிகவும் பரபரப்பாக பேசப்பட்டு கொண்டிருக்கும் செய்தியானது தமிழரசுக் கட்சியின் இணைத் தலைவராக இருக்கின்ற சீ.வி.கே. சிவஞானம் அவர்கள் ஈபிடிபி

தொடர்ச்சி 6ஆம் பக்கம்

### பதவிக் கதிரைக்காக கழுதை முதுகில் சாவாரி செய்ய நினைக்கிறது தமிழரசுக்கட்சி



**அரியநேந்திரன்**
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
இலங்கை தமிழரசுக் கட்சி
மட்டக்களப்பு மாவட்டம்

இலங்கை தமிழரசுக் கட்சி உள்ளூராட்சி சபை தேர்தலில் ஆட்சியைப் பிடிப்பதற்காக டக்ளஸ் தேவானந்தாவின் காலடியில் போய் சரணாகதி

தொடர்ச்சி 6ஆம் பக்கம்

### நான் சிவிகேயை தலைவராகவோ சுமந்திரனை செயலாளராவோ ஏற்கவில்லை பின்னர் ஏன் இவர்கள் பற்றி கதைக்கவேண்டும்.



**மார்க்கண்டு நடராசா**
கிழக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர், இலங்கை தமிழரசுக் கட்சி மத்தியகுழு உறுப்பினர்

சிவிகே சிவஞானம் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்தமையை வன்மையாக கண்டிக்கப்பட வேண்டும். இது மிகவும் மோசமான செயல் அதனைவிட நான் இன்னுமொரு

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

5 ஆம் பக்கம் தொடர்ச்சி→

# ஈ.பி.டி.பியுடன் தமிழரசின் தலைமை தேன்நிலவு கிழக்கில் தமிழரசுக்...

## தவராஜா சர்ஜீன்

சென்று உள்ளூராட்சி சபைகளில் வட கிழக்கில் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆட்சியமைப்பதற்கான ஆதரவை கோரியிருந்தார். இந்த விடயம். தமிழ்த் தேசிய அரசியல் வட்டாரத்தில் ஒரு குறிப்பாக எண்களைப் போன்றவர்கள் மத்தியில் மிகப்பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக யாழ்ப்பாணத்தைத் தாண்டி கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை பிரதேசத்தில் மிகவும் பாரிய எதிர்ப்பலைகளை உருவாக்கி இருக்கின்றது. காரணம் சீ.வி.கே சிவஞானம் ஐயா என்ற ஒரு தனி நபர் போய் சந்தித்திருந்தால் அதை நாங்கள் கருத்தில் கொண்டிருக்க தேவையில்லை. ஆனால் அவர் இலங்கைத் தமிழ் மக்களின் ஜனநாயகக் கட்சியாக பழம்பெரும் கட்சியாக இருக்கின்ற இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் என்ற அடிப்படையில் தான் சந்தித்திருக்கிறார். இதற்கான அதிகாரத்தை யார் அவருக்கு வழங்கியது என்ற ஒரு கேள்வி எழுகிறது அதனைத் தான் தொடர்ந்து மறுதினம் அன்றைய தினம் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளராக இருக்கின்ற சுமந்திரன் சொல்லியிருக்கின்றார்.

அரசியல் குழுவில் நாங்கள் முடிவெடுத்ததாக. ஆனால் அதற்கு உடனடியாக மறுப்பு அறிக்கையொன்றை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவரும், ஜனநாயகத் தேர்தல் மூலம் வெற்றி பெற்று கட்சியின் தலைவராக தெரிவுசெய்யப்பட்ட சிவஞானம் ஸ்ரீதரன் அவர்கள் தெளிவாகச் கூறி இருக்கின்றார்கள். அதே நேரத்தில் ஈபிடிபியின் செயலாளர் ஒரு அறிக்கை விட்டிருக்கிறார். சுமந்திரன் அவர்கள் சொன்ன நேர்காணலில் சொன்ன விடயத்தின் அடிப்படையில் சிவஞானம் ஐயா பேசவில்லை என்று. இதையெல்லாம் பார்க்கும் பொழுது ஒரு குழப்ப நிலை காணப்படுகிறது. மீண்டும், மீண்டும் இப்படியான கேவலமான செயற்பாட்டை இலங்கை தமிழரசுக் கட்சியில் இருக்கின்ற ஒரு சிலர் செய்துகொண்டிருக்கிறார்கள்.

இந்த விடயம் கிழக்கில் ஒரு பாரிய எதிர்ப்பலைகளை உருவாக்கியுள்ளது. அது கிழக்கையும் தாண்டி புலம்பெயர்ந்து வாழும் தமிழ்த் தேசியத்தை ஆதரிக்கின்ற தமிழரசுக் கட்சியின் ஆதரவாளர்கள், புலம்பெயர் வாழுகின்ற எமது மக்கள் பலர் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்கள். காரணம் அன்று ஈ.பி.டி.பி செய்தவைகள் உங்களுக்குத் தெரியும். ஆரம்பத்தில் ஒரு குழுவாக செயற்பட்டு பிறகு பின்னர் ஒட்டு மொத்தமாக அரச இலங்கை அரசாங்கத்தோடு இணைந்து செயற்பட்டவர்கள். இந்த ஈபிடிபியினர் தீவகப் பகுதியில் தேர்தல் காளத்திற்கு சென்ற அப்போதைய அமரர் எமது தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவர் மாவை சேனாதிராஜா ஐயா போன்றவர்களைக் கூட கடுமையாக தாக்கிய வரலாறுகூட இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு ஈபிடிபி கட்சியோடு, மேடைகளில் வாய்கிழிய தமிழ் தேசியம் பேசி மக்களின் வாக்குகளை பெற்றுக்கொண்டு இலகுவாக கொண்டு அடமானம் வைக்க முடியாது. இவர்களில் ஒருசிலர் நினைப்பது போன்று தமிழரசுக் கட்சி என்பது ஒரு சிலரின் சொத்து அல்லது ஒருசில பிரதேசத்தைச் சார்ந்தவர்கள் சொத்து அல்ல. இது ஒட்டுமொத்த வடகிழக்கு மக்களின் தமிழரசு. தமிழ் தேசிய மக்கள் தமிழர்களுடைய ஒரு ஜனநாயக கட்சி என்பதை மறந்து செயற்படக்கூடாது. ஆகவே எங்களுக்கு பதவிதான் முக்கியம் என்று சொன்னால் நாங்கள் கிழக்கிலே குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் அரச பங்காளிகளாக சேர்ந்து இயங்கிய கட்சிகள் இருக்கிறது. உதாரணமாக தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி இருக்கிறது. அவர்களுடனும் கூட்டணி அமைத்திருக்க முடியும். ஆனால் நாங்கள் அப்படிச் செய்யவில்லை. ஆனால் வடக்கில் சிலரது தான்தோன்றித்தனமான இப்படியான செயற்பாடு என்பது மிக மிக மோசமான தமிழ்த்தேசியத்தை புதை புதைகுழிக்குள்ள வைக்கிற ஒரு செயற்பாடு தான். இப்படியான தான்தோன்றித்தனமான செயற்பாடுகள் மிகவும் வன்மையாக. மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழரசுக்கட்சியின் பிரதிநிதிகளாக இருக்கின்ற நாங்கள் வன்மையாக கண்டிப்பதோடு, அந்தந்த பிரதேசங்களுடைய தீர்மானங்களையும் முடிவுகளையும் எடுக்க வேண்டிய கடப்பாடு அந்தந்த பிரதேசங்களின் மக்கள் அந்தந்த பிரதேச உறுப்பினர்களைச் சார்ந்ததாக அமைய வேண்டும். என்பதையும் வலியுறுத்துகின்றோம்.

## சீ.சிவயோகநாதன்

கட்சியினுடைய தலைவராக இருக்கின்ற டக்ளஸ் தேவானந்தா அவர்களை அவரது காரியாலயம் சென்று சந்தித்த விடயமானது மிகப்பெரும் பேசுபொருளாக இன்று ஊடகங்களில் பரப்பப்பட்டு வருகின்றது. உண்மையில் அதற்கான காரணங்கள் பல இருக்கின்றது. தமிழரசுக் கட்சியானது கடந்த காலங்களில் தமிழ் தேசிய நிலைப்பாடு என்று அவர்கள் சொல்லக்கூடிய ஒரு நிலைப்பாட்டுக்குள் சென்றாலும் எம்மைப் பொறுத்தவரையில் அதில் எந்த ஒரு உண்மையும் இல்லை. ஆனாலும் மக்களைப் பொறுத்தவரைக்கும் வாக்களிக்கும் மக்களில் மக்கள் கடைசி இறுதியாக நடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தல்களிலும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும், தமிழரசுக் கட்சிக்கும் வடக்கு கிழக்கில் அதிகமான வாக்குகளை செலுத்தி இருந்தார்கள். காரணம் தமிழ்த் தேசியப் பரப்பில் அவர்கள் இயங்குகிறார்கள் என்ற ஒரேயொரு நோக்கத்திற்காக. அந்த வகையில் மக்கள் அதிகமான வாக்குகளை அளித்திருக்கிறார்கள். ஆனால் ஆட்சி அமைக்க வேணும் என்ற ஒரு நோக்கத்திற்காக ஈபிடிபி யுடன் பேச்சுவார்த்தையை நடத்துவதற்கு சிவ. சிவஞானம் அங்கு சென்றதாக தகவல்கள் வந்திருக்கின்றது. ஆனால் உண்மையாகவே இதை எடுத்த எடுப்பில் சீ.வி.கே. சிவஞானம் அவர்கள் செய்திருப்பார்கள் என்பதில் எங்களுக்கு எள்ளளவும் நம்பிக்கையில்லை. இதற்குப் பின்னால் ஒரு முன்னோட்டமாக எம். ஏ. சுமந்திரன் அவர்கள் சென்று நீங்கள் கதையுங்கோ கதைச்சு பாருங்கோ. அதற்குப்பிறகு நிலைமைகள் சாதகமாக இருக்கும் என்றால் நாங்கள் அவர்களை வைத்துக்கொண்டு நாங்கள் அரசியலை அதிகமான இடங்களில் ஆட்சி அமைப்பதற்கு முயற்சி செய்யலாம் என்ற ஒரு கருத்தினை அவர் சொல்லியிருக்கலாம். அந்த வகையில் சிவ. சிவஞானம் ஐயாவை பொறுத்தவரையில் கடந்த காலங்களில் அவருக்கு பதவி என்பது ஒரு பேராசை பிடித்த மனிதர். தலைவர் பதவிக்கு முழு முழுமையாக ஒத்துழைத்த சுமந்திரன் அவர்கள் சொல்லும் செயற்பாட்டினை தான் செய்து முடிக்க வேணும் என்பதில் அவருக்கும் ஒரு கடப்பாடு இருக்கிறது போலும். அந்த வகையில் அவர் அந்த காரியத்தை செய்திருக்கின்றார். ஆனால் இதில் இருக்கின்ற தமிழ் பேசும் மக்கள் அல்லது போனால் இந்த மக்களுக்கு வாக்களித்த மக்களுக்கு இருக்கின்ற பிரச்சினை என்ன வென்றால் நாங்கள் இன்றைக்கு யுத்தக் குற்றம். யுத்தக் குற்றம் நடைபெற்றது, இனப்படுகொலை நடந்தது என்று பல விடயங்களை சொல்லிக் கொண்டிருக்கின்றோம். அதற்கு பின்னால் முழுமையாகவே சிங்களப் பேரினவாதம் மற்றும் அவர்களுடன் ஒத்துழைத்த ஒட்டுக்குழுக்களான ஈபிடிபி மற்றும் இன்னும் பல அமைப்புக்கள் இருக்கின்றது. அவர்கள் ஒரு காலகட்டத்தில் பொறுப்புக் கூற வேண்டிய தரப்பாக இங்கு இருக்கும் பொழுது நாங்கள் அவர்களை பிணை எடுக்கின்ற வேலையை அதாவது தமிழ்த்தேசிய நீக்கத்தையும், ஒரு நீதிக்கு அப்பாற்பட்ட ஒரு செயல்பாட்டையும் மிகக் கெட்டித்தனமாகச் செய்வதற்கு சிவிகே சிவஞானம் பயன்படுத்தப்பட்டு இருக்கிறார் என்பது தான் உண்மைச் சம்பவம்.

## அரியநேந்திரன்

அடைந்திருக்கிறது. பதில் தலைவர் என்று சொல்கிற சிவஞானம் ஐயா கட்சியின் மானத்தை வித்து இருக்கிறார் என்று தான் நான் நினைக்கிறேன். உண்மையில் டக்ளஸ் தேவானந்தாவின் வரலாறு என்பது தொடர்ச்சியாக தமிழ் தேசியத்திற்காக எதிர்த்து ஒரு துரோகமாக செயல்பட்டவர் என்பது எல்லோருக்கும் தெரியும். அதுவும் இல்லாமல் எங்களது பாராளுமன்றத்தில் தேசிய தலைவருக்கு எதிராக பல குற்றச்சாட்டுக்களைச் சாட்டிய ஒரு கீழ்த்தரமான ஒரு அரசியல்வாதிதான் டக்ளஸ் தேவானந்தா. அவரை தமிழ் தேசியத்திற்கு எதிரான சக்தியாகவே நாங்கள் பார்க்கிறோம். அப்படியான ஒருவரிடம் போய் கதிரைக்காக கழுதை முதுகில் சவாரி செய்கிற இது போன்ற ஒரு நடவடிக்கையை தான் இவர் எங்கட. தலைவர் சிவஞானம் ஐயா செய்திருக்கிறார். என்னை பொறுத்த மட்டில் பதில் தலைவர் சிவஞானம் ஐயா அவர்கள் தன்னிச்சையாக சென்றார். அதாவது அவரை யாரும் தூண்டுகிறார்களா என்பது வெளிவரவில்லை. ஏனென்றால் எடுத்ததற்கெல்லாம் அறிக்கைவிட்டு அல்லது இணங்க தமிழிசை கட்சியில் இவ்வாறான பிரச்சனை வருகின்ற போது கருத்துக்கூறுகின்றவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் இது தொடர்பாக மௌனம் சாதித்து கொண்டிருக்கிறார்கள். இந்த சபைகளை கைப்பற்றுவதற்காக பதவிக்காக இலங்கை தமிழரசு கட்சியை தந்தை செல்வா ஆரம்பிக்கவில்லை. ஒரு தேசிய கொள்கையாக இணைந்த வடகிழக்கில் ஒரு கொள்கை ரீதியான அரசியலையும், சமஷ்டி அடிப்படையிலான தீர்வையும் பெற வேண்டும் என்ற நோக்கில்தான் அவர் ஆரம்பித்தார். தவிர இவ்வாறான கீழ்த்தரமான அரசியல் செய்வதற்கு தமிழர் அரசியல் கட்சியை இப்பொழுது இருக்கின்றவர்கள் பாவிப்பதை கேட்டு நான் உண்மையிலே வெட்கப்படுகிறேன். வேதனைப்படுகிறேன். அவ்வாறான ஒரு முடிவை அவர்கள் உடனடியாக ரத்து செய்ய வேண்டும். இது ஒரு கண்டிக்கத்தக்க விடயம். என்னை பொறுத்த மட்டில் சிவஞானம் ஐயா அவர்களுக்கு முதுகெலும்பு இருந்தால் அல்லது ஒரு மானம் ரோசம் இருந்தால் அவர் இந்த பதவியை விலகி ஏற்கனவே தலைவராக தெரிவு செய்யப்பட்ட சிறிதரனிடம் பாரத்தை கொடுத்து விட்டு அவர் மௌனமாக இருந்தால் அவருக்கு அதுவே கௌரவமாக இருக்கும்.





சஞ்ஜயன்

# களங்கப்படுத்திக் கொண்ட தமிழரசு

உள்ளூராட்சி தேர்தலில் தமிழ் மக்கள் வழங்கிய ஆணையை, இலங்கைத் தமிழரசுக் கட்சி துஷ்பிரயோகம் செய்யும் வகையில் நடந்து கொண்டிருக்கிறது.

வரலாற்றில் முன்னொரு போதும் இல்லாத வகையில், அது மக்களின் ஆணையை மீறி, ஈபிடிபியுடன் கைகோர்த்திருக்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இல்லாமல் செய்து- தனிக்கட்சியாக தம்மைக் கட்டி எழுப்பும் நோக்கில் செயற்பட்ட, இலங்கை தமிழரசுக் கட்சி கடந்த நாடாளுமன்றத் தேர்தலில், தமிழ் மக்களிடம் பெருத்த அடி வாங்கியது.

தமிழரசுக் கட்சி மீது தமிழ் மக்கள் தமது மோசமான வெறுப்பையும், விரக்தியையும் வெளிப்படுத்திய தேர்தலாக அது அமைந்திருந்தது. யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும், தலா ஒரு உறுப்பினரை பெறுகின்ற அளவிற்கு, தமிழரசுக் கட்சி படுதோல்வி கண்டது.

மட்டக்களப்பு மாவட்டம் கை கொடுத்ததால், அது தப்பிப் பிழைத்துக் கொண்டது.

அதற்குப் பின்னர், சிங்களப் பேரினவாதக் கட்சிகளையும் அவற்றுடன் இணைந்த தமிழ் கட்சிகளையும் எதிர்த்து தீவிர பிரசாரம் செய்து, உள்ளூராட்சித் தேர்தலில் கணிசமான வெற்றியை பெற்றுக் கொண்டது. அந்த வெற்றியில் பெரும் பகுதி தமிழரசு கட்சிக்கு உரியதல்ல, ஏனைய தமிழ் தேசிய கட்சிகள் மேற்கொண்ட பிரசாரத்தின் பலனை தமிழரசு அறுவடை செய்து கொண்டது என்பதே உண்மை.

ஏனென்றால் தேசிய மக்கள் சக்தியின் எழுச்சியையும் வெற்றியையும் தடுக்க வேண்டியதன் அவசியத்தை தமிழரசு கட்சியை விட மிகத் தீவிரமாக பிரசாரம் மேற்கொண்டது, தமிழ் தேசிய பேரவை தான்.

ஆனால், அதற்கு உரிய பலனை அந்தக் கட்சியால் பெற்றுக் கொள்ள முடியாமல் போனது குறிப்பிடத்தக்க விடயம்.

வடக்கு, கிழக்கில் சுமார் 35 உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைக்கும் கனவுடன் இருக்கும் தமிழரசுக் கட்சிக்கு, புதுக்குடியிருப்பு, வெருகல்,

தொடர்ச்சி 16ஆம் பக்கம்



> “தலைமைத்துவ போட்டியும் அதிகார வெறியும் அங்கு தலைவிரித்தாடுகிறது.



# ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளரை நேரில் சந்திப்பதற்கு சந்தர்ப்பம் வேண்டும்

## காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் ஐ.நாவிடம் கோரிக்கை




ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேக்ர் இம்மாதம் நாட்டுக்கு வருகைதருவதற்கு உத்தேசித்திருக்கும் நிலையில், அவ்வாறு வருகைதரும் பட்சத்தில் முள்ளிவாய்க்காலுக்கு விஜயம் மேற்கொள்ளுமாறும், தாம் நேரில் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கு சந்தர்ப்பம் அளிக்குமாறும் கோரி வட, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் உயர்ஸ்தானிகரிடம் கடிதம் மூலம் கோரியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க் எதிர்வரும் 23 ஆம் திகதி நாட்டுக்கு வருகைதரவிருக்கும் நிலையில், வட, கிழக்கு வலிந்து காணாமலாக்கப் பட்டோரின் உறவுகளில் ஒரு தரப்பினர் எதிர்வரும் செப்டெம்பர் மாதத்துக்கு முன்பதாக வருகைதரவேண்டாம் எனக்கோரி உயர்ஸ்தானிகருக்கு ஏற்கனவே கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

அதேவேளை நாட்டுக்கு வருகைதரும் பட்சத்தில் முல்லைத்தீவுக்கு விஜயம் செய்யுமாறும், பாதிக்கப்பட்ட தரப்பினரை சந்திக்குமாறும் கோரி வட, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் செயலாளர் லீலாதேவி ஆனந்தநடராஜாவினால் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க்குக்கு அனுப்பிவைக்கப் பட்டிருக்கும் கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

வட, கிழக்கு மாகாணங்களிலுள்ள வலிந்து காணாமலாக்கப் பட்டோரின் குடும்பத்தின ராகிய நாம் நீதிகோரி சுமார் 3000 நாட்களுக்கும் மேலாகத் தொடர் போராட்டத்தினை முன்னெடுத்துவருகின்றோம்.

அது யுத்தத்தின்போதும், அதன் பின்னரும் அரச படையினரால் அழைத்துச்செல்லப்பட்ட எமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறிந்துகொள்ளும் நோக்கில் உண்மையையும், அதற்குரிய பொறுப்புக்கூறலையும் கோருகின்ற எமது இயலாமையின் வெளிப்பாடாகும்.

பல ஆண்டுகளாக இப்போராட்டத்தில் ஈடுபட்ட சுமார் 300 பேர் அதற்குரிய பதிலோ அல்லது நீதியோ கிட்டாமலே உயிரிழந்துவிட்டனர். ஆனால் எமது வயோதிபம் மற்றும் உணர்வு ரீதியான சோர்வுக்கு மத்தியிலும் நாம் நீதியைக்கோரி அமைதியான முறையில் போராடிவருகின்றோம்.

கடந்த 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள்பேரவையின் 37 ஆவது கூட்டத்தொடரிலிருந்து பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் நாம் ஜெனீவாவுக்குச்சென்று உரையாற்றியிருப்பதுடன், எமது எதிர்பார்ப்புக்கள் தொடர்பில் உறுப்புநாடுகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட தரப்பினருக்கு விளக்கமளித்து வந்திருக்கின்றோம். உண்மை, நீதி மற்றும் பொறுப்புக்கூறலை அடைவதே எப்போதைக்குமான எமது அசைக்கமுடியாத இலக்காக இருந்திருக்கின்றது.

அரசாங்கத்தின் அழைப்பின்பேரில் நீங்கள் எதிர்வரும் 23 ஆம் திகதி நாட்டுக்கு வருகைதரவிருப்பதனை நாமறிவோம். இருப்பினும் உங்களது இவ்விஜயம் ஜூன் மாதம் ஆரம்பமாகவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 59 ஆவது கூட்டத்தொடருக்கு மத்தியில் இடம்பெறவிருப்பதனால், அது எம்மத்தியில் தீவிர கரிசனைகளைத் தோற்றுவித்திருக்கின்றது.



குறிப்பாக ஜெனீவாவில் உங்களைச் சந்திப்பதற்கு நாம் பல தடவைகள் முயற்சித்த போதிலும், அது சாத்தியமாகாத நிலையிலேயே இவ்விஜயம் தொடர்பான எமது கரிசனைகள் வலுப்பெற்றிருக்கின்றன.

இவ்வாறானதொரு பின்னணியில் உங்களது இலங்கை விஜயத்தின்போது உங்களைச் சந்திப்பதற்கு இடமளிக்குமாறு கோருகின்றோம். நாம் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 59 ஆவது கூட்டத்தொடரில் கலந்துகொள்வதைத் தவிர்த்து, நாட்டில் இருப்பதன் ஊடாக உங்களை நேரடியாகச் சந்தித்துப் பேசமுடியும் எனக் கருதுகின்றோம்.

அவ்வாறானதொரு சந்திப்பு நாங்கள் முகங்கொடுத்துவரும் யதார்த்த சூழ்நிலையையும், எமது வலிகளையும் உங்களுக்கு எடுத்துரைப்பதற்கு வாய்ப்பளிக்கும் என எதிர்பார்க்கின்றோம்.


அதேபோன்று சுமார் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டிருக்கக்கூடும் என நம்பப்படும் இறுதி யுத்தம் இடம்பெற்ற முள்ளிவாய்க்காலுக்கு விஜயம் மேற்கொள்ளுமாறும் உங்களிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

முள்ளிவாய்க்காலுக்கான விஜயமானது மக்களின் வலிமிகு துயரம் ஏற்கப்படுவதைக் காண்பிக்கக்கூடிய வலுவான செயலாக அமைவதுடன் மாத்திரமன்றி, உண்மையை நீங்கள் கண்கூடாகப் பார்ப்பதற்கான சந்தர்ப்பத்தையும் வழங்கும்.

அது பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஆறுதலளிப்பதுடன் நீதியை அடைந்துகொள்வதை நோக்கிய அர்த்தமுள்ள நடவடிக்கையாகவும் அமையும் என அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

# விடுதலைப் புலிகளை வைத்து அரசியல் செய்யும் இனவாதிகள்!

### சமூக ஆர்வலர் சிரந்த அமரசிங்க





இந்த நாட்டில் உள்ள இனவாதிகள் மற்றும் மதவாதிகள் தங்கள் அதிகாரத்தை இழக்கும் ஒவ்வொரு தடவையும்இ விடுதலைப் புலிகள் அமைப்பு மீண்டும் எழுச்சி பெறுவதாக பொய்களைப் பரப்பி வருகின்றனர் என சமூக ஆர்வலர் சிரந்த அமரசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் ஒற்றுமையை அழிக்க பொய்யான அறிக்கைகளை வெளியிடுபவர்களை உடனடியாகக் கைது செய்யக் கோரி நேற்று பொலிஸ் முறையாடு ஒன்றையும் பதிவு செய்துள்ளார். ஊடகங்களுக்கு இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர், இந்த நாட்டில் உள்ள இனவாதிகள், மற்றும் மத வெறியர்கள் வெள்ளவத்தை கடற்கரையில் உறவினர்களுக்காக நடத்திய நினைவு நிகழ்வை சீர்குலைக்க முயன்றனர்.

அங்கு சென்றவர்களின் குடும்பத்தின் ஓர் உறவினர் போரின்போது இறந்திருக்கலாம். அவர்களை நினைவு கூருவது தவறல்ல. ஓர் உறவினரை இழந்ததன் வலி குடும்பத்தினருக்கு மட்டுமே தெரியும். எனவே, சமீபத்தில் வெள்ளவத்தை கடற்கரையில் தமது உறவுகளை போரில் இழந்தவர்களால் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

இது விடுதலைப் புலிகளை வளப் படுத்தவோ அல்லது மீண்டும் எழுச்சி பெறவோ அனுமதிக்காது. இவ்வாறான செயற்பாடுகளினால் பாதிப்புறும் இந்த நாட்டில் தமிழ் மக்களின் உரிமைகள் மற்றும் ஜனநாயகத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கின்றேன்-என்றார்.





# உகந்தை முருகன் ஆலயத்தில் புத்தர் சிலை?

நவீனன்

## காணி அபகரிப்பும் வர்த்தமானி சர்ச்சையும்!

**(தொடரும் ஆக்கிரமிப்புகள் தமிழர் தாயகத்தை சிதைத்து வருகிறது. பாரம்பரிய வரலாற்று ஆதாரங்களுடன் காணப்படும் தமிழ் பூர்வீகங்களை அழித்தலும் ஆக்கிரமித்தலும் தொடர்வது இன அழிப்பின் இன்னொரு வடிவமாகும்)**

தமிழ் மக்களுடைய பூர்வீக நிலங்கள் மற்றும் அவற்றின் மரபுரிமைகளை மாற்றி அமைக்கும் வகையில் அரசுடமையாக்குதல், மற்றும் பௌத்த சிங்கள மயமாக்கல் முயற்சிகளில் அரசு வெளிப்படையாகவே இயங்கி வருகின்றது.

வடக்கில் குருந்தூர்மலை விவகாரம், தையிட்டி விவகாரம், வெடுக்குநாறி மலை என்று பல ஆக்கிரமிப்புகள் தொடர்கின்றன. இதன் பின்னணியில், கிழக்கில் அம்பாறை மாவட்டத்தில் அமைந்திருக்கின்ற உகந்தை முருகன் ஆலயத்திற்கு செல்லும் முன்வாயிலிற்குமுன்பாக காணப்படுகின்ற கடற்கரையின் இடது புறத்தில் புதிதாக ஒரு புத்தர் சிலையினை நிறுவியிருக்கிறார்கள்.

உகந்தை முருகன் ஆலய புராதன வரலாறு கொண்ட புண்ணிய பூமியாகும். உகந்தைமலையில் 25 அடி முருகன் சிலை நிறுவும் பணியைத் வன இலாகாவினரும் முன்பு தடுத்து நிறுத்தினர். ஆனால் இங்கு எவ்வாறு புத்தர் சிலை நிறுவ அனுமதிக்கப்பட்டது எனும் கேள்வி எழுகிறது.

ஈழத்தில் தமிழர் பாரம்பரிய வரலாற்று ஆதாரங்களுடன் காணப்படும் பூர்வீகங்களை அழித்தலும் ஆக்கிரமித்தலும் தொடர்ந்து நடைபெறுகின்றது என்பதனை பல ஆக்கிரமிப்பு முயற்சிகள் மூலம் அறியலாம்.

உகந்தை முருகன் ஆலய புராதன தமிழர் வாழ்வியல் ஆதாரங்களைச் சிதைப்பதும் அதை அழிப்பதும் ஆக்கிரமிப்பதும் அடிப்படையில் நிறுவப்பட்டுள்ள இந்த புத்தர் சிலையானது, உகந்தை முருகன் ஆலய முன் வாயிலின் முன்பாகக் செல்லும் போது கடற்கரையில் இடது புறமாகக் காணப்படும் மலையில் கடற்படை முகாம் முன்பாக உள்ளது. இந்த மலையில் கடற்படையின் தொடர்பு கோபுரம் முன்பாக புத்தர் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

### வடக்கில் காணி அபகரிப்பு சர்ச்சை!

வடக்கு மாகாணத்தில் நில தீர்வு தொடர்பாக 2025 மார்ச் 28, அன்று வெளியிடப்பட்ட வர்த்தமானியை தற்போது அரசாங்கம் மீள திரும்பப் பெற்றுள்ளது.

வடக்கு மாகாணத்தில் உள்ள பல கிராமங்களில் நிலங்களை கையகப்படுத்துவது தொடர்பாக விவசாயம், கால்நடை, நிலங்கள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சகத்தின் கீழ் உள்ள நில உரிமை தீர்வுத் துறையால் வர்த்தமானி அறிவிப்பு எண் 2430 வெளியிடப்பட்டது. ஆட்சிக்கு வந்த அரசாங்கம் தமிழர் நிலத்தை அதன் உரிமையாளர்களிடம் திருப்பித் தருவதாக உறுதியளித்த போதிலும் மக்களின் நிலங்களை மீண்டும் கையகப்படுத்த முயற்சிப்பதாக குற்றஞ்சாட்டப்பட்டது. புதிதாக வந்த இந்த வர்த்தமானிக்கு எதிராக தங்கள் எதிர்ப்பை வடக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் அரசியல்வாதிகள் தெரிவித்தனர்.

வடக்கில் 5,940 ஏக்கர் காணிகளை சுவீகரிப்பதற்கு அந்த வர்த்தமானி அறிவித்தல் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆனால் தொடர்ந்த மக்கள் போராட்டத்தால் வடக்கில் காணி அபகரிப்பு வர்த்தமானி மே 27இல் வாபஸ் பெறப்பட்டது.

### நல்லாட்சியில் திருகோணமலை நில அபகரிப்பு:

சிறிலங்காவில் பெருமையாக கூறப்பட்ட “நல்லாட்சி காலத்தில்”, நாவற்குழி சிங்கள குடியேற்றம் சட்டபூர்வமாக்கப்பட்டது என்பது பலருக்கும் தெரியாத ஒரு உண்மை ஆகும். இதனைப் போல வவுனியா வடக்கு கொக்கச்சான்குளம் (கலாபோகஸ்வெவ 1 & 2) நாமல்புர குடியேற்றங்களும் சட்டபூர்வ சிங்கள குடியேற்றங்களாக்கப்பட்டன.

தொடர்ச்சி 10ஆம் பக்கம்



**வடக்கில் 5,940 ஏக்கர் காணிகளை சுவீகரிப்பதற்கு அந்த வர்த்தமானி அறிவித்தல் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.**

# ஜனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் சட்டவிரோதமாக கைதிகள் விடுதலை

## விசாரணையில் அதிர்ச்சி



ஜனாதிபதியின் பொது மன்னிப்பு சட்டவிரோதமாகப் பயன்படுத்தப்பட்டு, கடந்த வெசாக் தினத்தன்று சில கைதிகள் விடுவிக்கப்பட்டிருப்பது விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதியின் பொது மன்னிப்பை சட்டவிரோதமாகப் பயன்படுத்தி, வேறு கைதிகளை விடுவித்தது தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் முன்னெடுத்துள்ள விசாரணைகள் குறித்து பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கடந்த வெசாக் பௌர்ணமி தினத்தையொட்டி பொது மன்னிப்பு வழங்கும் திட்டத்தின் கீழ், அனுமதிக்கப்பட்ட கைதிகளுக்கு மேலதிகமாக, சில கைதிகளை சிறைச்சாலை நிர்வாகம் சட்டவிரோதமாக மன்னிப்பு வழங்கி விடுவித்ததாகக் கருதப்படும் சந்தேகநபர்கள் தொடர்பாக, கடந்த 06 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தால் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு முறைப்பாடு ஒன்று அனுப்பப்பட்டிருந்தது.

அந்த முறைப்பாட்டின் அடிப்படையில், குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விரிவான விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன், சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்திடம் அது குறித்து விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் ஆவணங்களைப் பரிசீலித்து அவரிடமிருந்து வாக்குமூம் பதிவு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்படி, இந்த பொது மன்னிப்பு சட்டவிரோதமாகப் பயன்படுத்தப்பட்டு, கடந்த வெசாக் தினத்தன்று சில கைதிகள் விடுவிக்கப்பட்டிருப்பது விசாரணைகளின் மூலம் தெரியவந்து கொண்டிருப்பதாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு சட்டவிரோதமாக ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட்ட கைதிகள் தொடர்பாக, சம்பந்தப்பட்ட சிறைச்சாலை அதிகாரிகள் உள்ளிட்ட அனைத்து தொடர்புடைய அதிகாரிகளுக்கு எதிராகவும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

இந்த விசாரணையில், இதற்கு முன்னரும் இவ்வாறு ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் விடுவிக்கப்படவிருந்த கைதிகளில் அனுமதி பெறப்படாத கைதிகளும் விடுவிக்கப்பட்டிருப்பது தொடர்பான தகவல்களும் வெளிப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, இது தொடர்பாக எதிர்காலத்தில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்றும், நீதிமன்றத்தால் குற்றவாளிகளாகத் தீர்ப்பளிக்கப்பட்ட நபர்களை சிறைச்சாலைகளில் இருந்து சட்டவிரோதமாக விடுவிப்பது தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5ஆம் பக்கம் தொடர்ச்சி→

## ஈ.பி.டி.பியுடன் தமிழரசின் தலைமை தேன்நிலவு கிழக்கில் தமிழரசுக்...

### மார்க்கண்டு நடராசா

விடயத்தைக் கூறவேண்டும். நான் தமிழரசுக் கட்சியின் தலைவர் தெரிவு செயலாளர் தெரிவில் பிழை என்று யாழ்ப்பாண கோர்ட்டில் இவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்திருக்கிறேன். யாப்புக்கு முரணான வகையில் அந்த தெரிவு நடைபெற்றுள்ளது. நான் சிவிகே பற்றி அலட்டிக்கொள்ளவில்லை ஏனெனில் அவர் எமது உண்மையான தலைவர் இல்லை. நான் இவர்களைப் பற்றி கதைத்தால் சிவிகேயே தலைவர் என கூறினால் எனது வழக்கிற்கான நியாயம் பிழைத்துவிடும். உண்மையில் பாராளுமன்ற உறுப்பினர்களான ஸ்ரீநேசன் சிறிதரன் போன்றவர்கள்தான் சிவிகேயின் செயற்பாடுகளுக்கு எதிராக கருத்துக் கூறவேண்டும். மத்தியகுழு எதிர்த்திருக்கவேண்டும். ஆனால் அவர்கள் கள்ள மௌனம் காக்கிறார்கள்.

9ஆம் பக்கம் தொடர்ச்சி→

## உகந்தை...

அத்துடன் குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் மாலனூர் (12ஆம் கட்டை) மற்றும் ஏரமடு (10ஆம் கட்டை) பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்கள் பல உருவாக்கப்பட்டன. திருகோணமலை சலப்பையாறு பகுதியில் 650 க்கும் மேற்பட்ட சிங்களக் குடும்பங்கள் மேலும் குடியேற்றபட்டன.

கிழக்கு மண்ணில் மட்டக்களப்பு கெவிலியாமடு பகுதியில் சிங்கள மக்களுக்கான மாதிரி கிராமம் ஒன்று உருவாக்கப்பட்டு 20-25 சிங்கள குடும்பங்களுக்கு வீடுகளும் 60 இற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு நிதி உதவிகளும் வழங்கப்பட்டன.

மட்டக்களப்பு மயிலத்தமடு மாதவனை பகுதியில் 50 இற்கு மேற்பட்ட பொலநறுவை, அம்பாறையை சேர்ந்த பண வசதி படைத்த சிங்கள விவசாயிகள் பண்ணைகள் அமைக்க அரசால் காணி வழங்கப்பட்டது.

### முல்லைத்தீவில் சிங்கள குடியேற்றம்:

ஒதியமலையை அண்டிய வவுனியாவின் எல்லைக் கிராமங்கள் பலவும் கஜபாகுபுரவாக ஆக்கப்பட்டன. குறிப்பாக சிலோன் தியேட்டர், டொலர்ஸ் பாம், தனிக்கல், நாவலர் பண்ணை போன்ற பகுதிகளிலும் சிங்களக் குடியேற்றங்கள் பல செய்யப்பட்டன.

முல்லைத்தீவின் எல்லையில் சிங்கபுர, 13 ஆம் கொலனி என பல சிங்களக் கிராமங்கள் மீள உருவாக்கப்பட்டன. கொக்குத்தொடுவாயில் மட்டும் 2,156 ஏக்கர் நிலம் சிங்கள மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. கொக்குதொடுவாய் பகுதியில் கோட்டக்கேணி அம்பட்டன் வாய்க்கால், வெள்ளக்கல்லடி, தொட்ட கண்ட குளம் போன்ற இடங்களில் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டனர்.

கோட்டைக்கேணி பிள்ளையார் கோவில் பகுதியில் 825 ஏக்கர் நிலம் சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டது என தகவல்கள் வெளியாகியுள்ளது. கொக்கிளாய் முகத்துவாரம் பகுதியில் 20 ஏக்கர் நிலம் சிங்கள குடியிருப்புக்காக வழங்கப்பட்டது. நாயாறு கொக்கிளாய் - முகத்துவாரம் பகுதிகளில் சுமார் 794 சிங்கள குடும்பங்கள் குடியேற்றப்பட்டன.

கொக்கிளாய், கருநாட்டுக்கேணி பகுதியில் சிங்கள மீனவர்களுக்கு காணி உரிமம் வழங்கப்பட்டது. ஆண்டான்குளம், திருக்கோணப்பட்டி, ஆத்தங்கடவை, மருதடிக்குளவெளி, ஆலடிக்குளம், சாமிப்பில கண்டல், ஈரக்கொழுந்தன் வெளி, படலைக்கல்லு, நித்தகைகுளம் போன்ற பகுதிகளில் சுமார் 647 ஏக்கர் நிலம் சிங்கள குடியேற்றங்களுக்காக வழங்கப்பட்டது என்பது பலருக்கும் தெரியாத செய்தியாகும். கொக்குத்தொடுவாய், புலிபாய்ந்தகல், நாயாறு, கொக்கிளாய் - முகத்துவாரம், சாலை ஆகிய பகுதிகளில் பருவகாலங்களில் தொழில் செய்ய தென்னிலங்கை மீனவர்கள் குடியேற்றப்பட்டனர். சூரியனாறு, முந்திரிகைக்குளம் பகுதிகளில் சிங்கள குடியேற்றவாசிகளுக்கு தமிழ் மக்களின் வயல் நிலங்கள் அபகரிகப்பட்டு வழங்கப்பட்டது.


வவுனியாவில் மன்னார் மதவாச்சி வீதியை சூழ்ந்த பகுதிகளில் சிங்கள குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டன. மன்னார் முசலிப் பகுதியிலும் சிங்களக் குடியேற்றம் உருவாக்கப்பட்டது. கொக்கடிவான் குளத்தின் சூழலிருந்த இருநூறு ஏக்கர் வயல் நிலம் 165 சிங்கள குடும்பங்களுக்கு பகிரப்பட்டது.

### தமிழர் வாழ்வியல் ஆதாரம் சிதைவு:

உகந்தை முருகன் ஆலய வளாகத்திலும் அதனைச் சூழவும் வன இலாகா, மற்றும் படையினர் புதிய நிபந்தனைகளையும் விதித்து ஆலய சூழலைச் சுருக்கியுள்ளனர். மேலும் பல கட்டுப்பாடுகளையும் விதித்துள்ளனர், வள்ளிமலை போன்ற இடங்களுக்குச் செல்லவும் கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர். இது தவிர சந்நியாசி மலையும் பறிபோகும் அபாயம் காணப்படுகிறது.

இந்த நிலையில் புத்தர் சிலை விவகாரம் இன மதங்களுடையே ஒற்றுமையின்மை ஏற்படுத்தி உள்ளது.

அத்தோடு இந்த இடத்தில் புத்தர் சிலை வைப்பதற்கான ஆயத்தமாக மலையில் பீடம் அமைக்கப்பட்டது. அத்துடன் இது உகந்தை ஆலய சூழலில் நிறுவப்பட்டுள்ள இரண்டாவது புத்தர் சிலையாகும். இதன் பின்னணியில் சிங்களவர்கள் பலரைக் குடியேற்றும் திட்டம் இருக்கிறது. வன இலாகாவின் செயற்பாடுகள் மற்றும் மலையில் நிறுவப்படவிருந்த 25 அடி முருகன் சிலையை நிறுவாமல் தடுத்தது அதன் பின்னர் தற்போது புத்தர் சிலை வைத்தது அதற்கு உடந்தையாக பல படை அதிகாரிகள் பின்னணியில் இருந்துள்ளனர். தமிழர் வாழ்வியல் ஆதாரங்களை தொடரந்து சிதைக்க சிங்கள ஆட்சியாளர் முயல்கின்றனர். இந்த சிலை உடனடியாக அகற்றப்படுவதோடு அரசு தமிழ் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுமா என்பது சந்தேகமே?



# தமிழ்க் கட்சிகளின் உடன்பாடுகளும் கூட்டுக்களுக்கான நகர்வுகளும் வெளிப்படுத்தும் செய்தி?



பேராசிரியர் கே.ரீ.கணேசலிங்கம்

ஈழத் தமிழர் அரசியலில் வினோதமான அறிவுபூர்வமில்லாத உரையாடல்கள் அதிகரித்த காலப்பகுதியாக சமகாலப் பகுதி காணப்படுகிறது. தமிழ் மக்கள் எல்லையற்ற நெருக்கடிகளையும் துயரங்களையும் அனுபவித்துக் கொண்டிருக்கும் சூழலில் அரசியல் கட்சிகளும் அரசியல்வாதிகளும் அவர்கள் சார்ந்திருக்கும் பொது வெளியில் உரையாடுகின்ற விடயங்களும் அதிக குதர்கமானதாக காணப்படுகிறது. அண்மையில் நடந்து முடிந்த உள்ளூராட்சிமன்ற தேர்தல் தெளிவற்ற பெரும்பான்மை அனைத்து கட்சிகளுக்கும் வடக்கு கிழக்கில் வழங்கியிருந்தது. ஆனாலும் தமிழ் தரப்புக்களிடமே அதிக ஆசனங்கள் பெறுவதற்கான வாக்குகளை தேர்தல் தந்திருந்தது. ஆனால் தமிழ் கட்சிகள் அரசியல் நடத்தையானது கடந்த காலப் போக்கினை மீளவும் நினைவுபடுத்தும் விதத்திலேயே நிகழ்கின்றன. தமிழ் மக்கள் இத்தகைய மோசமான அரசியல் கட்சிகளின் நடத்தைக்கூடாக ஏதும் மாற்றத்தை அடையலாமா? என்ற கேள்வியே அதிகம் ஏற்படுத்தி உள்ளது. இக் கட்டுரையும் தமிழ் மக்களின் அரசியலை நகர்த்தும் தரப்புகள் மேற்கொள்ளுகின்ற கூட்டுக்களும் உடன்படிக்கைகளும் தரப்போகும் விளைவுகளை தேடுவதாக அமைந்துள்ளது.

அணிசேர்தல், அல்லது கூட்டுச்சேர்தல் என்பன உலக வரலாற்றில் ஒரு தரப்பின் வலுவை மேலும் பலமடையச் செய்யும் எண்ணக்கருவாகும். எதிரிக்கு எதிராக அரசியல் ரீதியிலும் இராணுவ ரீதியிலும் கூட்டுக்கள் அல்லது அணிசேர்தல்கள் நிகழ்வது வழமையானது. பொருளாதார அர்த்தத்தில் அணிசேர்தலானது அபிவிருத்தியையும் தேசிய வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் இலக்காகக் கொண்டது. உலகம் முழுவதும் அணி சேர்த்தல் என்பதன் மூலமே வெற்றிகரமான மாற்றங்கள் எட்டப்படுகிறது. சில சந்தர்ப்பங்களில் உலகத்திற்கு கொடுமைகளையும் அணிசேர்தல் உருவாக்கிவிட்டுப் போகிறது. பாஸிசம் ஒரு கூட்டு என்பது எல்லோருக்கும் புரிந்து ஒரு அம்சம். பாஸிசம் (Facism) என்ற சொல் சிறு சிறு குச்சிகளை திரட்டி அவற்றை கூட்டி ஒன்றாக கட்டுவதன் மூலம் பலமாக இருத்தல் என்பதே அதன் அர்த்தமாகும். அத்தகைய பலம் இரண்டாம் உலக யுத்தத்தில் இனப்படுகொலைக்கான பலமாக தீர்ந்து போனது. உலக வரலாறு முழுவதும் இவ்வகை உடன்பாடுகள் அல்லது அணிசேர்தல் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றது. அதற்கு எதிரான தரப்புகளும் அணிகளாகி அத்தகைய தரப்புகளை முறியடிப்பதும் வெற்றிகான்கின்றமையும் நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. அரசியல் இலக்கு என்பது தான் முதன்மையானது. அரசியல் இலக்கை ஓர் தேசிய இனத்தோடு கட்டமைக்க முயலுகின்றபோது அது தேசிய இனத்தின் திரட்சி மிக முதன்மையானது.

> **ஜனநாயக தேசிய அணியினர் பொறுத்த வரை அவர்கள் எப்போதும் உடன்பாடுகளை மதித்து செயல்படுபவர் அல்லர். ஜனாதிபதி தேர்தலின் போது தமிழ் பொது வேட்பாளருக்காக எட்டப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை உதறிவிட்டு இலங்கையின் ஜனாதிபதியையும் பிற கட்சி ஜனாதிபதி வேட்பாளர்களையும் சந்தித்தமை நினைவு கொள்ளத்தக்கது. சந்தித்தது மட்டுமன்றி அதற்கு நியாயம் கற்பிக்கவும் அவர்கள் தவறவில்லை**

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

11 ஆம் பக்கம் தொடர்ச்சி→

## தமிழ் கட்சிகளின்...

ஈழத்தமிழர்கள் ஒரு சிறிய தேசிய இனமாக இருந்து கொண்டு தமக்கள் முரண்படுவதும் பகைத்துக் கொள்வதும் அபாயகரமானது என்பதை வரலாறு முழுவதும் சொல்லிக் கொடுத்துள்ளது. அதன் அடிப்படையில் இருந்து இன்றைய அனுபவங்களும் உடன்படிக்கைகளும் எட்டப்படுகிறது. அணிசேர்தல் அரசியல் ரீதியில் தந்திரோபாயமான வியூகம் என்று கருத முடியும். ஒன்றுக்கு மேற்பட்ட சக்திகள் ஒரு விடையத்தில் ஈடுபடுதல் என்பது அணிசேர்தல் என்ற அர்த்தம் புரிந்து கொள்ளப்படுகிறது. கடந்த 02.06.2025 அன்று தமிழ்த் தேசியப் பேரவையும் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியும் ஓர் உடன்படிக்கையில் ஒப்பமிட்டிருந்தனர். ஆனால் அந்த உடன்படிக்கை கடந்த கால அனுபவங்களிலிருந்து நோக்கப்படவில்லை என்ற விமர்சனம் தவிர்க்க முடியாதது. பிரெஞ்சு சிந்தனையாளர் ஒருவர் குறிப்பிடுவது போல் ஒப்பந்தங்களின் ஒப்பமிட்ட பேனாவின் மை காயமுன்னர் அதன் அடிப்படைகளை தகர்க்கும் நடத்தைகள் அரங்கேறுகின்றது என்பது போலவே இங்கும் நிகழ்வுகள் அரங்கேற்றப்படுகின்றன. குறிப்பாக ஓர் அணியோடு நிகழ்த்தப்படும் உடன்பாடு மேற்கொள்ளப்பட்ட பின்னர் அந்த அணியோடு பேண வேண்டிய உறவும் புரிதலும் அரசியல் வியூகமாக மட்டுமல்லாது அதனை கடந்து தேசத்தின் நலன் சார்ந்ததாகவும் பரிமாணம் பெறுகிறது.




ஜனநாயக தேசிய அணியினர் பொறுத்த வரை அவர்கள் எப்போதும் உடன்பாடுகளை மதித்து செயல்படுபவர் அல்லர். ஜனாதிபதி தேர்தலின் போது தமிழ் பொது வேட்பாளருக்காக எட்டப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை உதறிவிட்டு இலங்கையின் ஜனாதிபதியையும் பிற கட்சி ஜனாதிபதி வேட்பாளர்களையும் சந்தித்தமை நினைவு கொள்ளத் தக்கது. சந்தித்தது மட்டுமன்றி அதற்கு நியாயம் கற்பிக்கவும் அவர்கள் தவறவில்லை. அவர்களுடைய நியாயம் (அப்போதைய) ஜனாதிபதி அழைத்திருப்பதால் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற அடிப்படையில் சந்திப்பது தமது கடமையாகும் என ஒருதரப்பினரும், அதிலுள்ள இன்னோர் தரப்பினர் முதல் முதலாக எங்களை ஜனாதிபதி அழைத்திருப்பதனால் சந்திப்பது தவிர்க்க முடியாததென்றும் குறிப்பிட்டு தப்பிக் கொள்ளப் பார்த்தார்கள். ஆனால் தமிழ் பொது வேட்பாளர் பொறுத்து செய்யப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையே ஜனாதிபதிக்கும் தென் இலங்கையின் அரசியல் அணுகுமுறைக்கும் எதிரானதே. அதாவது தமிழ் மக்கள் ஜனாதிபதி அதேர்தலில் வெற்றி பெறுவதற்காக அல்ல. அது முடியாதது என்று தெரியாமல் அல்ல. அத்தகைய முட்டாள்களாக ஒப்பமிட்டவர்கள் இல்லை. தமிழ் மக்களுக்கு எதிரான பொது எதிரியின் செயல்பாட்டுக்கான எதிர்ப்பை வெளிப்படுத்தி அதனை ஒரு பொதுவாக்கெடுப்பாக கட்டமைக்கவே அத்தகைய உடன்பாடு. இதனை அவர்கள் புரிந்து கொள்ளவும் இல்லை. இலங்கை ஜனாதிபதியை சந்தித்து உரையாடுவது என்பது அத்தகைய பொது எதிரியின் காலடியில் செய்யப்பட்ட புரிந்துணர் உடன்படிக்கை போடுவதற்கு சமமானது என்பதை அவர்கள் தற்போதும் புரிந்து கொள்ளவில்லை. உடன்படிக்கையில் ஒப்பமிட்ட சிவில் பிரதிநிகளுக்கு ஜனாதிபதி அலுவலகம் தனிப்பட்ட அழைப்பு விடுத்ததென்பதை நினைவு கொள்ள வேண்டும். அக் கட்சியினர் எப்போதும் அதனைப் புரிந்து கொள்ள முடியாதவர்கள். இதுவே அவர்கள் மீது வைக்கப்படும் விமர்சனங்களுக்கான அடிப்படையாகும். ஆயுதப் போராட்ட காலத்திலும் அதன் பின்பான அரசியலிலும் அவர்களுடைய போக்கை தமிழ் மக்கள் அளவீடு செய்வதில் ஒருபோதும் தவறில்லை. ஆனால் இதில் தமிழ் தேசியப் பேரவை அத்தகைய உடன்படிக்கையை முன்வைக்கின்ற போது கடந்த காலத்தை ஒரு தடவை கருத்தில் கொண்டிருந்தால் அந்த உடன்படிக்கையின் வடிவத்தை காத்திரமானதாக அல்லது அதன் எதிர்காலம் பொறுத்து தெளிவான வடிவங்களை கட்டமைத்திருக்க முடியும். ஜனாதிபதி தேர்தல் பொறுத்த பொது வேட்பாளர் சார்ந்து மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை சிவில் அமைப்புகளால் அரசியல் கட்சிகளோடு மேற்கொள்ளப்பட்டது. இது அரசியல் கட்சிகளுக்கு இடையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆனாலும் சிவில் தரப்புகளின் ஒத்துழைப்போடு இந்த உடன்படிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்ற விமர்சனம் தவிர்க்க முடியாது. அதற்கான அடிப்படை ஒப்பமிடும் தரப்புகளை மக்கள் மத்தியில் முன்னிலைப்படுத்துகின்ற போது மட்டுமே அதனை தக்கவைக்க முடியும். மக்களோடு சேர்ந்து அதற்கான வெளிபாடுகள் இருத்தல் வேண்டும் என்பதே அதன் இலக்கணம். அது மட்டுமின்றி கடந்த காலத்தில் ஏதேதோ குழுக்களாக இருந்தவர்கள் இன்று கூட்டுக்குழுக்களாக மாறி இருக்கிறார்கள் என்பது புரிந்து கொள்ளப்பட முடியாத செய்தியாக உள்ளது. அரசியலின் யதார்த்தம் எடை போடப்பட வேண்டியது. அரசியல் என்பது உணர்ச்சிகளுக்கு உட்பட்டதல்ல. தனிப்பட்ட விருப்புகளுக்கும் அவாக்களுக்கும் ஆசைகளுக்குமானதல்ல. ஒருசிலரது ஆலோசனைக்குள்ளால் நகர்வதைவிடுத்து கூட்டான ஆலோசனைகளும் கட்சிகளுக்குள் உரையாடல்களும் தீர்மானமாக அமைதல் வேண்டும்.

தமிழ் மக்கள் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்ததன் விளைவுகளை உணர்ந்து செயல்படுகின்ற சூழலுக்குள் உள்ளூராட்சி மன்ற தேர்தல் அரங்கேற்றப்பட்டது. உள்ளூராட்சிமன்ற தேர்தல் தேசிய மக்கள் சக்திக்கு வடக்கு கிழக்கில் அதிக நெருக்கடியை கொடுத்தது. அது தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றில் நிகழ்ந்து கொண்டே இருக்கும் பதிவாகும். அத்தகைய பதிவை அல்லது அத்தகைய உணர்வை தமிழ் கட்சிகள் ஆட்சி அமைப்பதிலும் அதிகாரத்தை தக்கவைப்பதிலும் பேணுகிறார்களா? என்பது சந்தேகத்திற்குரியதாக மாறிவருகிறது. தமிழ் அரசியல் வாதிகளின் அருவருப்பான அரசியல் நடத்தை தமிழ் மக்களது எண்ணங்களை பாதிப்பதாகவே உள்ளது. அதற்கு ஆலோசனை வழங்குபவர்கள் மீது அதிருப்தி கொண்டவர்களாக உள்ளனர். அதிகாரத்தை கைப்பற்றுவதே அவர்களின் அரசியல் இலக்காகவுள்ளது. தமிழ் மக்களின் அரசியலைக் ஒன்றிணைந்து கட்டமைப்பது அவர்களது இலக்காக தென்படவில்லை. மாறாக தமிழ் மக்கள் அளித்த வாக்குகளை வைத்துக்கொண்டு எப்படியாவது ஒரு கூட்டணி அமைத்து ஆட்சி பிடித்து அதிகாரத்தைச் செயல்படுத்துகின்ற வெறியோடு அவர்கள் நடந்து கொள்ளுகின்றார்கள். தமிழ் மக்களின் தாய் கட்சியான தமிழரசுக் கட்சி கிளிநொச்சி தவிர்ந்த வடகிழக்கு பகுதிகளில் ஆட்சி அமைப்பதற்கான அணுகுமுறைகள் விட்டுக்கொடுப்புக்களை பார்க்கும் போது எந்தத் தரப்புடனும் கூட்டுச் சேர்ந்து ஆட்சியை அமைக்க தயாராகிறார்கள் என்ற விமர்சனத்திற்குள் உள்ளாகின்றார்கள். இதிலிருந்து வெற்றிகரமாக தப்பிக்கொள்வதற்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணி முயன்றபோதும் அதன் கடந்த காலம் அதன் மீதான விமர்சனத்தை மேலும் அதிகரித்திருக்கின்றது. ஆனால் அரசியலில் தமிழ் கட்சிகள் கட்சி நலனைக் கடந்து மக்களின் நலன் சார்ந்த பயணிப்பதற்கான சூழல் ஒன்றை கட்சிகளின் தலைமைகள் கட்டமைக்க முயல வேண்டும். தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைமை தமிழ் மக்களை நோக்கிய அரசியலுக்கான விட்டு கொடுப்புகளுக்கு வந்திருப்பது வரவேற்கப்படும் விடமாகவே தெரிகிறது. இது தமிழ் மக்களை அந்த அணியின் மீது கவனம் கொள்ள வழிவகுத்துள்ளது. அதனை நோக்கி தமிழ் மக்களுடைய அரசியல் வடிவமைக்கப்பட வேண்டும் என்ற விருப்பு காணப்பட்டாலும் அது ஏனைய தமிழ் அரசியல் கட்சிகள் மீதான கடந்தகால விமர்சனங்கள் மற்றும் தலைமைக்குரியவர்களாகவும் கொள்கையுடையவர்களாகவும் தம்மைக் காட்டிக் கொள்ளும் நடத்தையும் அவர்களை கேள்விக் குட்படுத்துகிறது. தமிழ் மக்கள் அனைத்து தமிழ் தேசியக் கட்சிகளும் இணைந்து உள்ளூராட்சியமைக்கும் எண்ணத்தையே அதிகம் கொண்டுள்ளார்கள். பொது எதிரிக்கு எதிராக ஒன்றிணைவதே அரசியல் கூட்டுக்களின் வியூகமாக அமைதல் வேண்டும்.

எனவே இது ஆட்சியை அமைப்பதற்கான கூட்டுக்களும் பதிலுக்கு பதில்; கட்சிக்குள்ளும் கட்சிக்கு வெளியேயும் நிகழ்த்தப்படுகின்ற அரசியலாகவே தெரிகிறது. இது அரசியலில் தமிழர்களின் இருப்பை மோசமாக அவமதிப்பதாக உள்ளது. இது தமிழ் மக்களுக்கு ஒரு செய்தியைச் தெளிவாகச் சொல்கிறது. அதாவது தற்போதைய அணிகளும், கூட்டுக்களும், அதன் தலைமைகளும் ஆரோக்கியமான அரசியலை தரக்கூடியவை அல்ல என்பது. தமிழ் கட்சிகள் தெளிவான வியூகம் வகுத்து கட்டமைக்க வேண்டிய அரசியலையும் பொது எதிரிக்கு எதிரான அரசியலையும் ஒரு போதும் கருத்தில் கொள்வார்கள் என எதிர்பார்க்க முடியாது. மாறாக தனக்குள்ளே மோதி முடிவுக்கு வரும் நிலையை நோக்கிய நகர்வார்கள். இதிலிருந்து மீள்வது என்பது புதிய தளத்திற்கும் புதிய அரசியல் சிந்தனைக்கும் தமிழ் மக்கள் நகர வேண்டிய ஒரு தேவைக்குள் அல்லது வலியுறுத்தலுக்குள் உள்ளனர் என்பதாகும்.

# தன்னிலை மறந்து தன்நாமம் கெட்டு மாற்றான் வீட்டுப் படியேறும் காலம்



பனங்காட்டான்

செம்மணி புதைகுழிகளைத் தோண்டத் தோண்ட வெளிவரும் மனித எலும்புக்கூடுகளும்இ உள்;ராட்சிச் சபைகளின் கதிரைகளைக் கைப்பற்ற தன்னிலை மறந்து தன்நாமம் கெட்டு மாற்றான் வீட்டுப் படியேறும் பெரும் ஆட்கள் பற்றிய காட்சிகளும் கடந்த சில நாட்களாக பரபரப்பையும்இ அதனிலும் மேலாக சலசலப்பையும் ஏற்படுத்தியுள்ளன.

ஊடகங்களிலும் இணையத் தளங்களிலும் பார்ப்பவைகளையும் கேட்பவைகளையும் பற்றிய சமாசாரங்களைவிடஇ காணாமற் போனவர்கள் பற்றிய செம்மணி விவகாரமே முதலில் நோக்கப்பட வேண்டியது. செம்மணி என்றதும் முதலில் நினைவுக்கு வருவது அங்குள்ள பெருமயானம். அகண்ட வயல்வெளியின் நடுவே பல மைல் தூரத்திலிருந்தும் பார்க்கக்கூடியதாக இது அமைந்துள்ளது. நான் யாழ்ப்பாணவா சியாகவிருந்த காலத்தில் அநேக மாக வாரத்தில் பல தடவை இந்த மயானத்தில் சுவாலை விட்டெரியும் அக்கினியைப் பார்த்திருக்கிறேன். எனது உறவினர்கள்இ தெரிந்தவர்கள் என்று பல நூற்றுக்கணக்கானோரின் இறுதிக் கிரியைகளை அடுத்து அவர்களின் உடல்கள் எரியூட்டப்பட்ட பொதுமயானம் இது. ஆனால் இன்றுஇ எரியூட்டப்படாது புதைக்கப்பட்ட எமது மக்களின் உடல்கள் தினம் தினம் இங்கிருந்து மீட்கப்படுகின்றன. அரச பயங்கரவாதத்தின் கொடுங்கரங்களாக இயங்கிய ராணுவ முகாமொன்று நீண்டகாலமாக சோதனைச் சாவடி என்ற பெயரில் இங்கிருந்தது. தர்மிஷ்டர் என்ற பெயரைக் கொண்ட ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஆட்சிக்காலத்தில் இது நிறுவப்பட்டது.

> **1971, 1987-1989 காலப்பகுதிகளில் தங்கள் தோழர்களான பல்லாயிரம் ஜே.வி.பி.யினரை சிறீமாவோ, ஜே.ஆர்.ஜெயவர்த்தன, பிரேமதாச ஆகியோரின் ஆட்சிக்காலத்தில் பறிகொடுத்து, அவர்களின் உடலங்களை வீதிகளிலும், வாவிகளிலும் அடையாளம் காணாது கண்டெடுத்த இன்றைய அநுர குமரவின் தேசிய மக்கள் சக்தியினர், செம்மணியில் மீட்கப் படும் எலும்புக்கூடுகளின் சரித்திரத்தை நிச்சயமாக புரிந்து கொள்ள வேண்டும்.**



1996ம் ஆண்டு செப்டம்பர் 7ம் திகதி இவ்வழியாக வீடு திரும்பிக் கொண்டிருந்த யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின் மாணவி கிரிஷாந்தி குமாரசாமி கைதடி ராணுவ முகாமுக்குள் கொண்டு செல்லப்பட்டுஇ அவர்களின் பசிக்கு இரையாக்கப்பட்டு கொல்லப்பட்ட வரலாறு சர்வதேச மன்னிப்புச் சபையின் பதிவில் உள்ளது. இக்கொலை இடம்பெற்ற வேளையில் சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாகவிருந்தார். இந்தப் படுகொலையை விசாரிக்க மறுத்ததால் இவரை ‘செம்மணி புகழ் அம்மணி’ என ஊடகங்களும் பொதுமக்களும் அழைத்தனர். இதே செம்மணி இப்போது மீண்டும் கிளறப்படுகிறது. இதனை எழுதும்வரை இங்கிருந்து பதினெட்டு எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. இவற்றுள் மூன்று கைக்குழந்தைகளுடையவை என்று சந்தேகிக்கப்படுகிறது. இவைகள் எலும்புக்கூடுகளாக ஆடைகளோஇ அணிகலன்களோ இன்றி காணப்படுகின்றன. பல எலும்புக்கூடுகள் இணைந்த நிலையில் காணப்படுவதால் ஒரே சமயத்தில் ஒரே இடத்தில் இவை புதைக்கப்பட்டிருக்கலாமென நம்பப்படுகிறது. இந்த விவகார வழக்கின் சட்ட வைத்திய அதிகாரியும்இ தடயவியல் பேராசிரியரும் சமர்ப்பித்த விண்ணப்பத்தின் பேரில் இவ்விடத்தை மனிதப் புதைகுழியாக பிரகடனம் செய்துள்ள யாழ்ப்பாண நீதிமன்றம்இ நாற்பத்தைந்து நாட்களுக்கு அகழ்வைத் தொடர கட்டளை வழங்கியுள்ளது. சட்ட வைத்திய

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# ஜனாதிபதி வேட்பாளர் மீது துப்பாக்கிச் சூடு

கொலம்பிய ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும், பழமைவாத கொலம்பிய செனட் உறுப்பினர்-மிகுவல் யூரிப் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகியுள்ளார்.

அடுத்த ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவார் என்ற நம்பிக்கை மேலோங்கிய நிலையில், போகோட்டா நகரில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் அவர் பங்கேற்றிருந்தபோதே, இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது.



### மோசமான நிலை

உள்ளூர் ஊடக தகவல்களின்படி, அவர் மிகவும் மோசமான நிலையில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமூக ஊடகங்களில் பரவி வரும் புகைப்படங்கள், தலையில் கடும் காயங்களுடன், 39 வயதான ஜனாதிபதி வேட்பாளர்; இரத்தம் தோய்ந்த நிலையில் இருப்பதை காட்டுகின்றன எனினும், செனட்டரின் நிலை குறித்து எந்த அதிகாரப்பூர்வ அறிக்கையும் இதுவரை வெளியிடப்படவில்லை. செனட்டரின் எதிர்க்கட்சியான ஜனநாயக மையம், யூரிப் டர்பே மீதான தாக்குதலை கடுமையானது என்றும், ஏற்றுக்கொள்ள முடியாத வன்முறைச் செயல் என்றும் விபரித்துள்ளது.

### படுகொலை முயற்சி

அமெரிக்க ராஜாங்க செயலாளர் மார்கோ ரூபியோ, "செனட்டர் மிகுவல் யூரிப் மீதான படுகொலை முயற்சியை கடுமையாக கண்டித்துள்ளார். இது ஜனநாயகத்திற்கு நேரடி அச்சுறுத்தலாகும் என்று குறிப்பிட்டுள்ள அவர், கொலம்பிய அரசாங்கத்தின்; வன்முறை கலாசாரத்தையும் விமர்சித்துள்ளார்.

13 ஆம் பக்கம் தொடர்ச்சி→

## தன்னிலை மறந்து

அதிகாரியின் அறிக்கையின் பிரகாரம்இ குறிப்பிட்ட இடத்தில் 1.6 மீற்றர் அளவிலான குழிகளில் மனித என்புஇ எச்சங்கள் காணப்படுகிறது. குழப்பமான சூழலில் முறையற்ற விதத்தில் இவை புதைக்கப்பட்டுள்ளன. இது ஒரு ரகசிய புதைகுழியாக இருக்கலாம் என தெரிய வந்துள்ளது. ஏறத்தாள அடுத்த மாதம் மூன்றாம் வாரம்வரை அகழ்வு இடம்பெறலாம். இன்னும் எத்தனை உடல்கள் காணப்படுமோ தெரியாது. படையினரால் கைது செய்யப்பட்டு காணாமலாக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் இந்தப் புதைகுழிக்குள் இடப்பட்டார்கள் என்பதும் தெரியாது. வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இவ்விடத்தில் குழுமி சோகத்துடன் நடப்பவற்றை அவதானித்து வருகின்றனர். ஆனால்இ தமிழ் அரசியல்வாதிகளையோஇ உள்;ராட்சிச் சபைகளுக்குத் தெரிவானவர்களையோ இங்கு காணவில்லை. அவர்களுக்கு இப்போது நேரமில்லை. எலும்புக்கூடுகளுக்கும் வாக்குரிமை இருந்தால் தவறாமல் தலைகாட்டியிருப்பார்கள். 1971, 1987-1989 காலப்பகுதிகளில் தங்கள் தோழர்களான பல்லாயிரம் ஜே.வி.பி.யினரை சிறீமாவோ, ஜே.ஆர். ஜெயவர்த்தன, பிரேமதாச ஆகியோரின் ஆட்சிக்காலத்தில் பறிகொடுத்து, அவர்களின் உடலங்களை வீதிகளிலும், வாவிகளிலும் அடையாளம் காணாது கண்டெடுத்த இன்றைய அநுர குமரவின் தேசிய மக்கள் சக்தியினர், செம்மணியில் மீட்கப்படும் எலும்புக்கூடுகளின் சரித்திரத்தை நிச்சயமாக புரிந்து கொள்ள வேண்டும். புரிந்து கொள்வார்களென நம்பலாம். முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை தடுக்காது விட்டது மட்டும் போதாது. படையினரின் கைகளிலுள்ள துப்பாக்கிகள் ஒருபோதும் பயன்படுத்தக்கூடாது என்று சொல்வதுடன் மட்டும் நின்றுவிடக்கூடாது. தமிழர் தாயகத்தில் அரச பயங்கரவாதத்தின் விளைச்சல் என்னவென்பதை அனுபவ ரீதியாக உணர்ந்து அதற்குரிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்க வேண்டுமென மக்கள் எதிர்பார்க்கிறார்கள். 'தாமதமாகும் நீதிஇ மறுக்கப்படும் நீதி' என்பதை ஆட்சிக் கதிiயில் இருப்பவர்கள் நினைவிற் கொள்ள வேண்டும். செம்மணி விவகாரம் ஒருபுறத்தே நீட்சி பெற்றுக் கொண்டிருக்கஇ உள்; ராட்சிச் சபைகளின் கதிரைகளை கைப்பற்றும் போட்டியும் நம்ப முடியாதளவுக்கு நீண்டு கொண்டிருக்கிறது. தினம் தினம் வெவ்வேறு காட்சிகள் காணப்படுகின்றன. தமிழ்த் தேசியவாத கட்சிகள் என்று தம்மை அழைப்பதில் பெருமைப்படும் தமிழரசுஇ தமிழ்த் தேசிய பேரவை (தமிழ் காங்கிரஸ்)இ ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி என்பவை ஒன்றுக்கொன்று ஒளித்து விளையாடுவது போல பேரப் பேச்சுகளில் ஈடுபட்டுள்ளன. இதுபற்றி எதுவுமே புரியாத அப்பாவி மக்கள் விழிபிதுங்க நடப்பவைகளைப் பார்த்து அதிர்ந்துள்ளனர். ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் ஆதரவு தங்களுக்கே கிடைக்குமென நம்பியிருந்த தமிழரசுக் கட்சியின் பதில் தலைமைஇ இயற்கையின் நியதியில் நம்பிக்கை இழந்து புதிய உறவுகளைத் தேடுகிறது. இதற்காக அர்த்தராத்திரியில் சேரமுடியாத இடத்துக்கு குறுஞ்செய்தி அனுப்பி சந்திப்புக்கு நேரம் கேட்கிறது. எல்லா விடயங்களிலும் தம்மையே முதலிடத்தில் நிறுத்தி செயற்படும் பதில் செயலாளர் சுமந்திரன் இந்த விடயத்தில் மட்டும் தமக்கு எதுவுமே தெரியாதது போல் நடித்துக் கொண்டிருக்கிறார். ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணிஇ கஜேந்திரகுமாரின் பேரவையுடன் கூட்டு ஒப்பந்தம் செய்துவிட்டது. இரண்டும் இணைந்து சில சபைகளை கைவசப்படுத்த வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. கூட்டணிப் பிரமுகர்களில் ஒருவரான சித்தார்த்தன்இ ஈ.பி.டி.யின் டக்ளஸ் தேவானந்தாவுடன் பேச்சு நடத்துவதற்கு மேற்கொண்ட முயற்சி தமிழரசுக்கு மேலும் கலக்கத்தைக் கொடுத்தது. சித்தார்த்தன் - டக்ளஸ் சந்திப்புக்கு முன்னர் தாம் சந்தித்து இணைப்பை ஏற்படுத்த விரும்பிய தமிழரசுக் கட்சி அதில் முந்திக் கொண்டது. டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலகத்துக்கு தமிழரசின் பதில் தலைவர் சி.வி.கே. சிவஞானம் நேரடியாகச் சென்று சுமார் முப்பது இதனை சிவஞானம் அவர்கள் கவனித்திருக்க சாத்தியமில்லை. பின்னர் ஊடகத்தின் கேள்விக்கு பதிலளித்த டக்ளஸ் எதிலும் பிடிகொடுக்காது, தமது தரப்பினருடன் உரையாடி மக்கள் நலன் சார்ந்த முடிவெடுக்கப்படும் என்று மட்டும் கூறினார். இதன் பின்னர், இன்னொரு ஊடகத்துக்கு இவர் கருத்துத் தெரிவிக்கையில், இப்பொழுது எவருக்கும் மக்கள் நலனில் அக்கறையில்லை, தங்கள் இருப்பிலும்; கதிரைகளிலும்தான் ஆசை அதிகம். எமது கொள்கைகளை முன்னர் எதிர்த்தவர்கள் இப்போது அதனை ஏற்று வருகிறார்கள் என்று நேரடியாகக் கூறியுள்ளார். 'நேற்றுவரை நீ யாரோ நான் யாரோ? இன்று முதல் நீ வேறோ நான் வேறோ?' என்ற பாடல்தான் இப்போது நினைவுக்கு வருகிறது.

சி.வி.கே.சிவஞானம் அவர்களின் நிலைமை பதில் தலைவராகியபின் பரிதாபத்துக்குரியதாகி வருகிறது. பல சந்தர்ப்பங்களில் இவர் யாருக்காகவோ பேசுவது போலவும், இடைச்செருகலாக அகப்படுவது போலவும் தெரிகிறது. 2017ம் ஆண்டிலும் இவ்வாறான ஒரு சூழ்நிலையில் அவர் அகப்பட்டிருந்தார். அன்று முதலமைச்சராகவிருந்த சி.வி.விக்னேஸ்வரன் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை வடமாகாண ஆளுனரிடம் இவரே கையளித்தார். இதுபற்றிப் பின்னர் கூறும்போது, அவ்விடத்தில் வைத்து சுமந்திரன் சார்பு உறுப்பினர்கள் தீர்மானத்தை தமது கைக்குள் திணித்துவிட்டதால் தாம் கையளிக்க நேர்ந்ததாக கூறி வருத்தப்பட்டார். இப்போதும் உள்;ராட்சிச் சபைகளை கைப்பற்றுவதற்காக அன்று நடந்ததுபோல் இவரை சுமந்திரன் தரப்பு பயன்படுத்துகிறதா என்ற சந்தேகம் கட்சிக்குள்ளேயே ஏற்பட்டுள்ளது. கட்சியின் மத்திய குழுவின் முடிவின்றி தம்மிஷ்டப்படி செயல்படும் இவர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் குரல்கள் கிளம்பியுள்ளன. மட்டக்களப்பு முன்னாள் மேயர் சரவணபவன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் ஆகியோர் இவரை பதவி நீக்கக் கோரியுள்ளனர். யாழ்ப்பாண மாநகர சபையில் கஜேந்திரகுமாரின் பேரவையும், ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியும் இணைந்து பதினாறு எண்ணிக்கையைக் கொண்டுள்ளன. தமிழரசிடம் பதின்மூன்று உறுப்பினர்கள் உண்டு. டக்ளசின் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் நால்வர் உள்ளனர். இவர்களை எவ்வாறாவது சேர்த்துவிட்டால் பதினேழு எண்ணிக்கையாகும். அப்படியானால் ஒரு வாக்கு வித்தியாசத்தில் யாழ்ப்பாண மேயர், உதவிமேயர் பதவிகளை கைப்பற்றலாமென்பது தமிழரசு போட்டிருக்கும் கணக்கு. இதற்காகவே இரவிரவாக பேரங்களும் பேச்சுகளும் இடம்பெறுகின்றன. எதுவுமே மக்கள் நலனுக்காக அல்ல. இந்த மாதம் பதினாறாம் திகதிவரை இந்த நாடகம், தமிழக தொலைக்காட்சிகளில் வரும் சீரியல்கள்போல் கலகலப்பாக தொடரும். முடிவில் யார் யாரால் ஏமாற்றப்படுவாரோ? இடையில் வேறொருவர் எங்கிருந்தோ முன்வருவாரோ? யாரறிவார் அவைபற்றி? நிமிடங்கள் ஆதரவுக் கோரிக்கையை முன் வைத்தார். அதன் பின்னர் இருவரும் ஊடகவியலாளர்களைச் சந்தித்தனர். இதன்போது ஈ.பி.டி.பி.யின் ஆதரவு தங்களுக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை தமக்கு இருப்பதாக சிவஞானம் அவர்கள் தெரிவித்தார். அருகே நின்ற டக்ளஸ் தமது கொடுப்புக்குள் ஒரு நமட்டுச் சிரிப்புடன் அப்போது நின்றார்.

# தனியார் காணியில் இருந்து துப்பாக்கிகள் மீட்பு!



வவுனியாவில் தனியார் காணியில் இருந்து துப்பாக்கிகள் மீட்பு! வவுனியா இறம்பைக்குளம் பகுதியில் அமைந்துள்ள தனியார் காணியில் இருந்து பழுதடைந்த நிலையில் காணப்பட்ட இரு துப்பாக்கிகள் மற்றும் ரவைகள் பொலிசாரால் மீட்கப்பட்டுள்ளது.

இன்று காலை குறித்த காணியில் அதன் உரிமையாளர்களால் அபிவிருத்தி பணிகளை செய்வதற்காக ஜேசிபி இயந்திரம் மூலம் அகழப்பட்டுள்ளது.

இதன்போது மண்ணில் புதையுண்ட நிலையில் காணப்பட்ட இரண்டு ரி56 ரக துப்பாக்கிகள் மற்றும் அதற்கு பயன்படும் 450 ரவைகள் தென்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு சென்ற பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன் ஆயுதங்களை அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை குறித்த பகுதியில் 1985 ஆம் ஆண்டுகாலப்பகுதியில் இந்திய இராணுவத்தின் முகாம் ஒன்று இயங்கியதாக தெரிவிக்கப்படுகின்றது

# சமல் ராஜபக்ச விரைவில் கைது செய்யப்படலாம்!

முன்னாள் அமைச்சர் சமல் ராஜபக்ஷ, அடுத்த சில நாட்களில் கைது செய்யப்படலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

2022ஆம் ஆண்டு மே 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறையின்போது திஸ்ஸமஹாராமவில் உள்ள அவரது வீடு மற்றும் சொத்துக்கள் தீக்கிரையாக்கப்பட்டு அழிக்கப்பட்டன எனத் தவறான தகவலை அளித்துள்ளார் என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அதற்காக அரசிடம் இருந்து ஒரு கோடியே 50 லட்சத்து 21 ஆயிரத்து 600 ரூபா மோசடி செய்த குற்றச்சாட்டில் சமல் ராஜபக்ஷ விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளார் எனத் தெரியவருகின்றது.

# டென்மார்க்கில் தமிழ்மொழித் தேர்வில் மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்பு

டென்மார்க்கில் நடைபெற்ற நடைபெற்ற அனைத்துலகத் தமிழ்மொழித் தேர்வு 2025 . டென்மார்க் மாலதி தமிழ்க் கலைக்கூடங்களில், அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையால் இவ்வாண்டும் நடத்தப்பட்ட எழுத்துத் தேர்வு, கடந்த ஆண்டுகள் போலவே இவ்வாண்டும் மிகச் சிறப்பாக நடைபெற்றுள்ளது. மாணவர்கள் அனைவரும் உற்சாகமாகவும் மனநிறைவுடன் தேர்வில் பங்கேற்றதைத்அவதானிக்க முடிந்தது.

மேற்பார்வையாளர்களாகப் பங்கு பற்றிய நிருவாகிகளும், ஆசிரியர்களும் தங்களது பொறுப்பை மிகச் சீராக, முழு ஈடுபாட்டுடன் நிறைவேற்றியுள்ளனர். எமது தாய்மொழியின் தனித்துவத்தை உணர்ந்து, இத்தேர்வில் பங்குபற்றிய அனைத்து மாணவ மாணவியருக்கும், பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், மற்றும் நிர்வாகிகளுக்கும், டென்மார்க மாலதி தமிழ்க் கலைக்கூடம் தமது உளமார்ந்த வாழ்த்துகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர்.

2 ஆம் பக்கம் தொடர்ச்சி →

# சிங்கள இனவெறி...

கிருஷாந்தி குமாரசாமி என்ற மாணவி, படுகொலை செய்யப்பட்டார். இளம்பெண் தனது பாடசாலை தேர்வுக்குப் பின்னர் வீட்டிற்குத் திரும்பும் வழியில் சிறீலங்கா இராணுவத்தினரால் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு, கொலை செய்யப்பட்டார். அவரைத் தேடி வந்த தாயும், சிறிய சகோதரனும், அண்ணனும் அயல்வீட்டினர் சிலரும் இராணுவத்தினரால் கொல்லப்பட்டனர்.

இந்த வழக்கு விசாரணையின் போது சோமரத்ன ராஜபக்சே என்ற சிப்பாய் குற்றத்தை ஒப்புக்கொண்டு செம்மணியில் 400 உடல்கள் புதைக்கப்பட்டுள்ளன என சாட்சி அளித்தார். இதுவே செம்மணிப் புதைகுழி வெளிவருவதற்கான முக்கிய அம்சமாக அமைந்தது.

## கடந்த காலத்தில் அகழப்பட்ட செம்மணி மனிதப் புதைகுழி

கிரிஷாந்தி கொலை வழக்கின் குற்றவாளிகள் வழங்கிய வாக்குமூலத்தினையடுத்து, செம்மணி புதைகுழியினை அகழ்வதற்கு நீதிபதி திரு மாணிக்கவாசகர் இளஞ்செழியன், யாழ் நீதவான் நீதிமன்ற விசேட நீதிபதியாக நியமிக்கப்பட்டார். செம்மணிப் புதைகுழி அகழ்வு 1999 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் 2000 ஆம் ஆண்டு பங்குனி 27 ஆம் திகதி வரையான ஒன்பது மாதங்கள் நடைபெற்றது. கிரிஷாந்தி படுகொலையின் மரண தண்டனைக் கைதிகள் சிறப்பு விமானம் மூலம் யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வரப்பட்டு செம்மணிப் புதைகுழி தோண்டப்பட்டது. செம்மணியில் 25 புதைகுழிகள் தோண்டப்பட்டு 16 சடலங்கள் மீட்கப்பட்டன, எனினும், அவர்கள் அடையாளப்படுத்திய 10 புதைகுழிகளில் சடலங்கள் இருக்கவில்லை. இவ்வாறு மீட்கப்பட்ட 16 பேரினது சடலங்களும் அடித்துக் கொலை செய்யப்பட்டவை என மரண விசாரணை தீர்ப்பு வழங்கி, யாழ். நிரந்தர நீதிபதியிடம் வழக்கினை பாரப்படுத்திவிட்டு செம்மணிப் புதைகுழியின் விசேட நீதிபதி திரு மா.இளஞ்செழின் தனது பணியினை நிறைவு செய்தார்.

இந்நிலையில் கடந்த பெப்ரவரி மாத ஆரம்பத்தில் செம்மணிப் பகுதியில் உள்ள இந்து மயானத்தில் அபிவிருத்திப் பணிகளுக்காக குழிகள் வெட்டப்பட்டபோது அதற்குள் இருந்து மனித எலும்புச் சிதிலங்கள் மீட்கப்பட்டன. அதன் பின்னர் தற்போது அகழ்வுப் பணி மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

## வடக்கு கிழக்கில் மனிதப் புதைகுழிகள்

வடக்கு மற்றும் கிழக்கு இலங்கையில் கடந்த பல தசாப்தங்களில் நடைபெற்று வந்த யுத்தங்களிலும், சிறீலங்கா இராணுவ ஆக்கிரமிப்புகளிலும், பாகுபாடான உள்நாட்டு அரசியலில், தமிழர்கள் அடிக்கடிக் கொல்லப்பட்டு புதைக்கப்பட்ட சம்பவங்களைச் சுட்டிக்காட்டும் முக்கியமான மனிதப் புதைகுழிகள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை மனித உரிமை மீறல்களுக்கான முக்கிய ஆதாரங்களாகத் திகழ்கின்றன. மன்னார் கறடிகாமம் மனிதப் புதைகுழி (2018) இங்கு 323 எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டன. யாழ்ப்பாணம் செம்மணிப் மனிதப் புதைகுழி (1999) இங்கு 16 எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டன. செம்மணி சித்துபாத்தி இந்து மயானம் தற்போது 19 எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அதேபோல 2023 ஆம் ஆண்டு முல்லைத்தீவு கொக்குத் தொடுவாய் புதைகுழையில் 40 எலும்புக்கூடுகளும் கிளிநொச்சி இரணைமடு மற்றும் கனகாம்பிகை பகுதியில் சுமார் 20 வரையான எலும்புக்கூடுகளும் வவுனியாவில் (2013) 30 எலும்புக்கூடுகளும், மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியில் (2020) 19 எலும்புக்கூடுகளும், திருகோணமலை கந்தளாயில் 10 எலும்புக்கூடுகளும் மீட்கப்பட்டிருக்கின்றன. இதனை விட முல்லைத்தீவில் இறுதி யுத்தத்தின்போது கைது செய்யப்பட்ட மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டிருக்கலாம் என்கின்ற அச்சமும் நிலவிவருகின்றது.

## மறுக்கப்படும் நீதி

சிறீலங்கா அரசால் இந்த மனிதப் புதைகுழிகள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான விசாரணைகள் தடையின்றியோ சட்டரீதியாகவோ நடத்தப்படவில்லை. நீதிபதிகள், சட்ட மருத்துவ நிபுணர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். காவல்துறைகள் நீதிமன்ற உத்தரவை செயல்படுத்த மறுத்துள்ளன. சாட்சிகள் பாதுகாப்பற்ற நிலையில் வாழ்கின்றனர். விசாரணைகளைத் தடுக்க நீதிமன்றங்களில் வழிகாட்டுதல்கள் செய்யப்பட்டுள்ளன. அதிகம் கண்டுபிடிக்கப்பட்ட இடங்களில், அந்த உடல்களின் அடையாளம் காணப்படவில்லை, அந்த மரணங்கள் எப்படி நடந்தன என்பது வெளிக்கொணரப்படவில்லை, குற்றவாளிகள் தண்டிக்கப்படாமல் விடப்பட்டுள்ளனர். இது அனைத்தும் நீதி மறுக்கப்பட்டிருப்பதையே நிரூபிக்கின்றன.

## சர்வதேச தலையீடும் நீதியும் வேண்டும்

சிறீலங்கா அரசின் மீது உள்நாட்டு விசாரணைகளில் நம்பிக்கை வைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த அனுபவங்களால், தமிழ்க் குடும்பங்கள் மற்றும் மனித உரிமைப் பாதுகாப்பு அமைப்புகள், சர்வதேச கண்காணிப்பு, விசாரணை, நீதிமன்றம் போன்றவற்றையே வலியுறுத்துகின்றன. மனிதப் புதைகுழிகள் தொடர்பாக தனிப்பட்ட சட்டம் இயற்றப்பட வேண்டும். ஒரு சார்பற்ற சுயாதீன அமைப்பு உருவாக்கப்பட வேண்டும். மாற்றப்படாத சாட்சிகள் பாதுகாக்கப்பட வேண்டும். செம்மணி மனிதப் புதைகுழிகள், இலங்கையில் தமிழர்கக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட போரின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்களின் முக்கிய சான்றுகளாகவும், இன அழிப்பிற்கான சான்றுகளாகவும் உள்ளன.

இதனிடையே செம்மணியில் தற்போது தோண்டப்பட்டுவரும் மனிதப் புதைகுழி சட்டவிரோதமான இரகசியமான புதைகுழிகளில் ஒன்றாக இருக்கலாம் என்ற சந்தேகம் காணப்படுவதோடு அங்கு மேலும் பல புதைகுழிகள் இருக்கலாம் என்ற அச்சத்தையும் தமிழ் மக்களிடம் தோற்றுவித்துள்ளது. இதற்கிடையில் புதைகுழி உள்ள பகுதியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படவில்லை எனவும் அகழ்வுப் பணிகளை முன்னெடுப்பதற்கும், சட்ட மருத்துவ அதிகாரி விடயங்களை செயற்படுத்துவதற்கும் போதுமானளவு நிதி இல்லை என்றும் சொல்லப்படுகின்றது.

சமூகத்தின் மனித தன்மையையே கேள்விக்குள்ளாக்கும் இவ்வாறான இனப்படுகொலைகளுக்கு நீதி வழங்காமல் குற்றவாளிகளை பாதுகாத்து கொண்டு எந்த தளத்திலும் முன்னேற முடியாது. இலங்கைத் தீவில் எந்த ஆட்சியாளர்களுக்கும் நீதி செய்ய வேண்டும் என்கின்ற அரசியல் விருப்பு இல்லாத சூழலில் சர்வதேச பொறிமுறையுடனான விசாரணையே தமிழின அழிப்பிற்கான நீதிகோரலாக அமையும் என்றும் தமிழ்த்தேசிய அவதானிப்பு மையம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மன்னாரில் மக்களின் கருத்தை கேளாது தூக்கம் போட்ட சிறீலங்கா அமைச்சர்



மன்னார் நகரப் பகுதிக்குள் காற்றாலை அமைப்பது தொடர்பில் மன்னாரில் 07/06/2025 நடைபெற்ற கலந்துரையாடலில் மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சருக்கு எமது கடுமையான ஆட்சேபத்தை வெளிப்படுத்தினோம். அதனால் ஏற்படுகின்ற பாதிப்புகளையும் முன் வைத்திருந்தோம் அமைச்சர் எமது கருத்துக்களை பொருட்படுத்தவே இல்லை அவர் அதிக நேரம் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தார். மக்களின் உணர்வுகளை இந்த அரசும் கிஞ்சித்தும் புரிந்து கொள்ளவதாகத் தெரியவில்லை.

தாம் ஆட்சிக்கு வந்தவுடன் ஜனநாயக கருத்துக்களுக்கு மதிப்பளித்து மக்களின் விருப்போடு திட்டங்கள் நிறைவேற்றப்படும் என தேர்தல் மேடைகளில் உரத்துப் பேசிய ஜேவிபி சித்தாந்தத்தில் வந்த என் பி பி என்னும் முகமூடிகளின் உண்மை தோற்றம் அதிகாரம் கிடைத்த உடனே சுயம் வெளிப்படுகின்றது.

7 ஆம் பக்கம் தொடர்ச்சி→

## களங்கப்படுத்திக்...

மண்முனை தெற்கு, போரதீவுபற்று, கரைச்சி மற்றும் பூநகரி ஆகிய 6 உள்ளூராட்சி சபைகளில் மாத்திரம் தனித்து ஆட்சி அமைக்கின்ற பலம் கிடைத்தது.

ஏனைய உள்ளூராட்சி சபைகளில் ஏனைய கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சியமைக்க வேண்டிய நிலையில் தமிழரசுக் கட்சி இருக்கிறது.

இந்த நிலையில் தமிழரசு கட்சி அனைத்து சபைகளிலும் தாமே முழுமையாக அதிகாரத்தை கைப்பற்றும் நோக்கில், ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி, தமிழ் தேசிய பேரவை ஆகிய கூட்டணிகளுடன் பேச்சுக்களை மேற்கொண்ட போதும் எந்த விட்டுக்கொடுப்புகளுக்கும் தயாராக இருக்கவில்லை.

அது முழுமையாக, சுயநல நோக்கிலேயே செயற்பட்டது.

தமிழ் தேசிய பேரவை விட்டுக் கொடுப்புடன் செயற்பட்ட நிலையில், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியுடன் கொள்கை உடன்பாடு ஒன்றை செய்து கொள்ளும் சூழலை தோற்றுவித்தது.

இந்த திடீர் அரசியல் சூழல், தமிழரசுக் கட்சிக்கு அதிர்ச்சியை கொடுத்தது.

அதன் இன்றைய தலைமைத்துவம் அதிகார வெறியுடன் முடிவுகளை எடுக்கத் தொடங்கியது.

அதன் விளைவு கடந்த கால் நூற்றாண்டுக்கும் மேலாக தமிழ் தேசிய விரோத அரசியலை முன்னெடுத்து வரும் ஈபிடிபியின் தலைமையகமான சிறிதர் தியேட்டர் வாசலில் போய் சரணாகதி அடைந்திருக்கிறது தமிழரசு கட்சி.

தமிழரசு கட்சியின் தலைவர் சி.வி.கே. சிவஞானம் ஈபிடிபி பொதுச்செயலாளர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து, உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பதற்கு ஆதரவு கோரியிருக்கிறார்.

இந்தளவுக்கும் ஈபிடிபி ஒன்றும் உள்ளூராட்சித் தேர்தலில் மிகப்பெரிய வெற்றியை பெற்ற கட்சி அல்ல.

அதன் ஆதரவை பெற்று விட்டால் கூட, தமிழரசு கட்சியால் தனித்து ஆட்சி அமைக்கக் கூடிய நிலை பெரும்பாலான இடங்களில் இல்லை. அவ்வாறிருந்தும் ஏன் தமிழரசு கட்சி ஈபிடிபியுடன் கைகோர்க்க முனைந்தது?

இலங்கை தமிழரசு கட்சி இன்று நிலை தடுமாறிப் போய் இருக்கிறது.

அந்தக் கட்சியின் இரண்டு தலைவர்களான இரா.சம்பந்தன், மாவை சேனாதிராஜா ஆகியோரின் மரணத்திற்கு பின்னர், அதன் பாதை முற்றிலுமாகவே மாறி விட்டது. மாற்றப்பட்டு விட்டது. கட்சிக்குள் குழப்பங்களும் பிரச்சினைகளும் மலிந்து விட்டது. தலைமைத்துவ போட்டியும் அதிகார வெறியும் அங்கு தலைவிரித்தாடுகிறது. இந்த சூழலில் தான் தவறான ஒரு தெரிவை அந்த கட்சியின் தலைமை மேற்கொண்டு இருக்கிறது. ஈபிடிபியுடன் இணைந்து ஆட்சியமைக்க எடுத்த முடிவு ஒரு வரலாற்றுத் தவறு. இதனை தமிழரசு கட்சியின் உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் கூட நேர்மையாக ஒப்புக்கொள்கிறார்கள்.

ஏனென்றால், 2001 ஆம் ஆண்டு தேர்தல் பிரசாரத்துக்குச் சென்ற தமிழ் தேசிய கூட்டமைப்பினரை ஈபிடிபியினர், தீவகத்தில் வழிமறித்து தாக்குதல் நடத்தியிருந்தார்கள்.

அந்த தாக்குதலில் தமிழரசு கட்சியின் இரண்டு ஆதரவாளர்கள் கொல்லப்பட்டனர்.

மாவை சேனாதிராஜா தலையில் படுகாயம் அடைந்தார். எம்.கே. சிவாஜிலிங்கத்தின் கால் அலவாங்கினால் குத்தி முறிக்கப்பட்டது.

கூட்டமைப்பின் 28 ஆதரவாளர்கள் அந்தச் சம்பவத்தில் காயம் அடைந்தனர்.

1998 யாழ்ப்பாணம் மாநகர சபைத் தேர்தலில் தொடங்கி, அதன் பின்னர் இடம்பெற்ற அத்தனை தேர்தல்களிலும், தமிழரசு கட்சி அல்லது தமிழர் விடுதலைக் கூட்டணி அல்லது தமிழ் தேசிய கூட்டமைப்பை மிக மோசமாக விமர்சித்து, அதனை தோற்கடிப்பதற்கு, சிறிலங்கா அரச ஆதரவையும் சலுகை அரசியலையும் முன்னெடுத்தது ஈபிடிபி.

அது தவிர தமிழ்த் தேசிய அரசியலை காட்டிக் கொடுத்து, விடுதலைப் போராட்டத்தை பலவீனப்படுத்திய துரோக கும்பல் அது.

ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட பெருமளவானோரின் படுகொலைகளுக்கு காரணமானது ஈபிடிபி. அப்படிப்பட்ட ஈபிடிபியுடன், தமிழரசு கட்சி உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைப்பதற்காக ஒன்றிணைந்திருப்பது ஒரு வரலாற்று துயரம். தமிழரசு கட்சி இப்படி ஒரு முடிவுக்கு வரும் என்று யாரும் எதிர்பார்த்ததில்லை. ஆனால் சுமந்திரனின் வழிகாட்டலில் இது மாத்திரமல்ல, இதை விட மோசமான முடிவுகளுக்கும் கூட, தமிழரசுக் கட்சி வருவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றதை மறுக்க முடியாது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில், தேசிய மக்கள் சக்தி அதிக ஆசனங்களை கைப்பற்றுவதற்கு காரணமாக இருந்தது, தமிழரசு கட்சியின் செயற்பாடுகளும், சுமந்திரனின் கருத்துக்களும் தான்.

அவர் ஜனாதிபதி நித்திரை கொண்ட, சஜித் பிரேமதாசவுக்கு கட்சி ஆதரவளித்தாலும், தனது தனிப்பட்ட ஆதரவு, அனுரகுமார திசாநாயக்கவுக்குத் தான் என்று வெளிப்படையாக கூறியிருந்தார். அவர் தேசிய மக்கள் சக்தியின் அனுதாபியாகவே பல சந்தர்ப்பங்களில் நடந்து கொண்டார்.

அதுதான் நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் கட்சிக்கு வாய்ப்பாக அமைந்தது. நாடாளுமன்றத் தேர்தலில் தனது பதவி பறிபோனதை பின்னரே சுமந்திரன் விழித்துக் கொண்டு, தேசிய மக்கள் சக்தியுடன் மல்லுக்கட்டத் தொடங்கினார். இன்று ஈபிடிபியுடன் கூட்டு வைக்கின்ற அளவிற்கு தமிழரசு கட்சியை வழிநடத்திச் சென்றிருக்கிறார்.

2023ஆம் ஆண்டு உள்ளூராட்சி தேர்தல் அறிவிக்கப்பட்ட போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு சாவு மணி அடித்தவர் சுமந்திரன்.

உள்ளூராட்சித் தேர்தலில் தனித்தனியாக போட்டியிடுவோம், பின்னர் ஒன்றிணைந்து ஆட்சி அமைப்போம் என, தனியாகத் தீர்மானத்தை எடுத்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெறுமையாக்கியவர் சுமந்திரன். ஆனால், இப்போது, உள்ளூராட்சி தேர்தலில் தனித்தனியாக போட்டியிட்ட ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளை விட்டு விட்டு, அவற்றை அரவணைத்து செல்ல விரும்பாமல் சிங்களப் பேரினவாத கட்சிகளுடனும், முஸ்லிம் கட்சிகளுடனும், தமிழ்த் தேசிய விரோத கட்சிகளுடனும், கூட்டு சேர்ந்து ஆட்சி அமைக்க முற்படுகிறார்.

வவுனியாவில் வெண்கல செட்டிகுளம் பிரதேச சபையில்,ஆட்சியமைக்கும் அதிகாரத்தை சிங்களக் கட்சிக்கு விட்டுக் கொடுக்கவும், இணங்கியிருக்கிறது தமிழரசுக் கட்சி.

ஆனால், தமிழர் பகுதிகளில் ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளை ஆட்சி அமைக்க விடாமல் தடுப்பதற்காக, ஈபிடிபி போன்ற தமிழ் தேச விரோத கட்சிகளை அரவணைத்துக் கொள்கிறது.

இதன் மூலம், தமிழ் தேசிய அரசியல் கட்சி என்று சொல்லிக் கொள்ளும் தகுதியை தமிழரசு கட்சி இழந்து விட்டது.

இனிமேல் தமிழரசு கட்சியினால், தமிழ்த் தேசியக் கட்சி என்று நெஞ்சை நிமிர்த்தி உரிமை கோர முடியாது.

ஏனென்றால் , தமிழ்த் தேசிய அரசியலுக்கும் தமிழ் மக்களின் விருப்பத்திற்கும் மாறாக செயற்படும் ஒரு கட்சியினால், தமிழ் தேசிய அரசியல் கட்சியாக அடையாளப்படுத்திக் கொள்ளும் அருகதை கிடையாது.

எஸ்ஜேவிசெல்வநாயகம் தொடக்கம், மாவை சேனாதிராஜா வரை, கட்டிக் காப்பாற்றப்பட்டு வந்த தமிழரசு கட்சியின் அரசியல் பாரம்பரியம், இப்பொழுது தமிழ் தேசிய அரசியலில் இருந்து விலகி தமிழ்த் தேசிய விரோத அரசியல் என்ற நிலைக்குள் மாறி இருக்கிறது. இந்த மாற்றம் தமிழ் தேசிய அரசியலுக்கு ஒரு மிகப்பெரிய அடி.

இது தமிழ்த் தேசிய நலன்களை விரும்புகின்ற மக்களை காட்டிக் கொடுத்த செயல். ஈபிடிபியுடன் கைகுலுக்கியதன் மூலம் அது தன்னைத்தானே கறைப்படுத்திக் கொண்டிருக்கிறது.

இந்த கறையை யாராலும் கழுவி விட முடியாது. தமிழ்த் தேசிய அரசியலை ஒற்றுமையாக முன்னெடுக்க வழங்கப்பட்ட மக்களாணை அது தவறாக பயன்படுத்தி விட்டது. தமிழரசு கட்சியினால் இந்த களங்கத்தை துடைத்தெடுப்பது முடியாத காரியம்.